DEEPAM .news

தீபம்

தமிழின் முதல்தர

கனடாப் பதிப்பு

• வார இதழ் • தீபம் 47 • 19.10.2016



எங்களுக்குள்ள கவலை அரசியலமைப்பு திருத்தம் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெற வேண்டும். பின்னர் கருத்துக் கணிப்பிற்கு போக வேண்டும். எந்த வகையிலும் இனவாத சக்திகளுக்கு இடமளிக்காதிருந்தால்தான் கருத்துக் கணிப்பில் வெல்ல முடியும்.

விரிவான செய்தி பக்கம் 4

‘எழுக தமிழில் மக்கள் திரள வேண்டுமென மனதார விரும்பினேன்’

வெளிப்படையாக பேசும் மாவை

தேசிய கீதத்துக்கு முன்பு!.

தொறொன்ரோ மாவட்டக் கல்விச் சபை (Toronto District School Board-TDSB), இந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் கல்வி ஆண்டு ஆரம்பமான நாளிலிருந்து அதன் பொறுப்பில் இருக்கும் 588 பள்ளிக்கூடங்களிலும் வரவேற்கத்தக்க புதிய நடைமுறையொன்றைக் கொண்டு வந்துள்ளது. வழமையாகப் பள்ளிக்கூடம் ஆரம்பாக முன்பு கனடாவின் தேசிய கீதம் பாடப்படும். அதன் பின்னரே வகுப்புகள். புதிய நடைமுறையின் படி, தேசிய கீதம் பாடப்படுவதற்கு முன்பாகப் ஒரு சிறு ஒப்புக்கொள்ளல்/அறிவித்தல் செய்யப்படும். அதன் சாரம் இதுதான்:

இந்த நாட்டின் பழங்குடி மக்களின் வழமைகளை மதிக்கிறோம். அவர்களுடைய நிலங்களிலேயே எங்கள் பள்ளிக்கூடம் அமைக்கப் பட்டிருக்கிறது என்பதைப் பொறுப்புடன் ஏற்றுக் கொண்டு அறிவிக்கிறோம். பழங்குடி மக்களின் இருப்பு இந்த நிலங்களில் இடையறாது தொடர்கிறது என்பதையும் நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம்.

தேசிய கீதம் பாடுவதற்கு முன்பாக ஒவ்வொரு நாளும் இந்த ஒப்புதல்/அறிவித்தல் செய்யப்படுவது தொறொன்ரோப் பள்ளிக் கூடங்களின் புதிய காலைச் சடங்காக அமைந்திருக்கிறது. இது பெரும் வரவேற்பையும் பெற்றிருக்கிறது. கனட்டவின் தேசிய கீதமும், தேசியக் கொடியும் பழங்குடி மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்துவன அல்ல. அவை ஆங்கிலேயரையும் ஃபிரெஞ்சுக்காரரையும் மட்டுமே குறித்துக் காட்டுகின்றன.

மாணவர்களுக்கு எமது வரலாற்றைத் தகுந்த முறையில் சொல்ல ஆரம்பிப்பது மிகவும் பயனுள்ளது. கனடாவின் பாடப் புத்தகங்களில் பழங்குடி மக்கள் பற்றிய வரலாறும் நாம் அவர்க்குச் செய்த அநியாயங்களும் இனப்படுகொலையும் உரிய முறையிலும் தெளிவாகவும் இடம்பெறுவதில்லை. எனவே ஒவ்வொரு நாளும் காலையில் இடப் பெறுகிற இந்த அறிவித்தல் வரலாற்றை ஒளிவு மறைவின்றிச் சொல்ல வழி திறந்திருக்கிறது எனக் கருத இடம் உண்டு. இதனைக் கற்பிக்கக் கிடைத்த அற்புதமான தருணமாக ஆசிரியர்கள் தமது மனதில் கொள்ள வேண்டும்.

பழங்குடி மக்களுக்கு நடந்த இனப்படுகொலை பற்றிய உண்மைக்கும் மீளிணக்கத்துக்குமான ஆணைக்குழு (Truth and Reconciliation Commission) சென்ற ஆண்டு வழங்கியிருந்த பரிந்துரைகளில் ஒன்றில் கனடாவில் எல்லா மாணவர்களுக்கும் பழங்குடி மக்களின் வரலாறு, வாழ்வு பற்றி அறிவூட்டப்பட வேண்டும் என்பது முக்கிய மானதாகும். அதன் ஆரம்பமாகவே நாம் இதனைக் கருத வேண்டும்.

இந்த அறிவித்தல் பழங்குடி மக்களைக் கலந்தாலோசித்த பிற்பாடுதான் அவர்களுடன் ஒப்புதலுடன் இடம் பெறுகிறது. கலந்தாலோசனைகளில் நீண்ட காலமாகக் கலந்து கொண்ட பழங்குடி மூத்தோனான டியூக் ரெட்போர்ட்(70) அவர்கள் இது பற்றி மிக்க மகிழ்ச்சி தெரிவித்தார். தன்னுடைய சிறு வயதில் தன்னுடைய மொழியைப் பேசினாலோ அல்லது பண்பாட்டைப் பேண முயன்றாலோ தனக்குக் கிடைத்த கடுந்தண்டனைகளையும் நினைவு கூர்ந்தார்.

இதனுடைய இரண்டாவது படியாகப் பழங்குடி மக்களின் வரலாறு, வாழ்வு, பண்பாடு போன்றவற்றை விரிவாக மாணவர்களுக்குக் கற்பிக்கும் திட்டம் அமைகிறது.

காலங்கடந்தது எனினும் இவை கனடாவின் எல்லாச் சமூகங்களாலும் உணர்ந்தும் தெரிந்தும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியவை.

இன அழிப்பு, பண்பாட்டு ரீதியான இனப் படுகொலை, போன்ற விடயங்களுக்கு நீதி கிடைக்க வேண்டுமாயின் அரசுகள் முதலில் நடந்தவற்றை ஏற்றுக் கொள்ள வேண்டும். ஒப்புக் கொள்ள வேண்டும். அதன் பிற்பாடுதான் நீதி வழங்கள், நட்ட ஈடு வழங்கல், உரிய தீர்வு வழங்கல் பற்றிப் பொறுப்புடன் பேச முடியும். கனடிய அரசுகள் இந்த வகையில் தமது குற்றங்களை ஏற்றுக் கொண்டு முன் செல்கிறார்கள். எனினும் பழங்குடி மக்களைப் பொறுத்தவரையில் கனடிய அரசு கடக்க வேண்டிய தூரம் இன்னும் அதிகம் என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

வெறுமனே ஒப்புக்கொள்வதன் மூலம் மட்டும் நாம் கடந்து சென்று நீதியை எய்த முடியாது. வார்த்தைகள் மட்டுமல்ல. செயலும் செயற்பாடுகளும்தான் உண்மையான ஈடுபாட்டையும் பாசாங்குத்தனத்தையும் வெளிச்சம் போட்டுக் காட்டக்கூடியவை.

கனடிய அனுபவத்தில் இருந்து இலங்கை ஆட்சியாளர்கள் கற்றுக் கொள்ளலாம். ஆனால் மாட்டார்கள்!!!!!

Deepam Canada
3-2094 Lawrence Ave.E
Toronto on M1R 2Z6 Canada
416.240.9727
info@deepam.news editor@deepam.news www.deepam.news

மார்க்கம் தோன்கில் தொகுதி: 2018 ஒன்றாரியோ மாகண தேர்தலில் பழமைவாதக் கட்சியின் வேட்பாளர் யார்?



எதிர்வரும் 2018ம் ஆண்டில் நடைபெறவுள்ள ஒன்றாரியோ மாநில அவைக்கான தேர்தலில் போட்டியிட விரும்புவோர்களிலிருந்து, ஒவ்வொரு தொகுதியிலும் தாம் நிறுத்தவுள்ள பிரதிநிதிகளை தெரிவுசெய்வதற்கான கட்சிகளின் மட்டத்திலான தேர்தல்கள் அடுத்த வருட ஆரம்பமுதல் நடக்கத் தொடங்கும். அவற்றில் எதிர்வரும் ஜனவரி மாதமே பழமைவாதக் கட்சி தனது வேட்பாளர்களை தொகுதிவாரியாக தெரிந்தெடுக்கும் நோக்குடன் கட்சியின் உள்ளக தேர்தலை நடாத்தவுள்ளது.

இந்தத் தேர்தலில், மார்க்கம் தோன்கில் தொகுதியில் முற்போக்கு பழமைவாதக் கட்சியின் சார்பில் போட்டியிட தாம் விரும்புவதாக நிமால் விநாயக மூர்த்தி மற்றும், தியோ அன்ரனி ஆகியோர் அறிவித்துள்ளனர்.

தமிழர்களுக்கு வெற்றிவாய்ப்புக் கூடிய ஒரு தொகுதி என்று பரவலாகப் பேசப்படுகிறது என்பதால் பலரதும் கவனம் இதன் மீது குவிக்கப்பட்டிருக்கிறது.

இவர்களிருவரில், தியோ அன்ரனி அவர்கள் ஏற்கனவே உட்கட்சித் தேர்தலில் நின்ற அனுபவத்தைக் கொண்டவர். அண்மையில் நடந்து முடிந்தஸ்காபரோ றூஜ் றிவர் தொகுதிக் கான இடத்தேர்தலில் போட்டியிடுவதற்கான தனது விருப்பை தெரிவித்து கட்சியின் உள்ளக தேர்தலில் போட்டியிட தயாராயிருந்தபோதும், அவ்வாறொரு தேர்தல் நடாத்தப்படாமலே வேட்பாளர் தெரிவு நடைபெற்றிருந்தது. நியாமானதும் நீதியானதுமான முறையில், இந்தத் தொகுதிக்கான வேட்பாளர் தெரிவு செய்யப் படும் என கட்சியின் தலைவர் பற்றிக் பிறவுண் அவர்கள் தெரிவித்திருந்தார். ஆயினும், இறுதி நேரத்தில் அவ்வாறான ஒரு தேர்தல் நடக்காமலே, றேமண்ட் ச்சோ அவர்கள் கட்சியின் அந்தத் தொகுதிக்கான வேட்பாளராக அறிவிக்கப்பட்டார். இந்த நடவடிக்கைக்காகக் கட்சித் தலைவர் பற்றிக் பிறவுண் மீது பல விமர்சனங்களை முன்வைக்கப்பட்டிருந்தன. கன்சர்வேற்றிவ் கட்சியின் சார்பிலும் ஒரு தமிழர் தேர்தலில் நின்றிருந்தால், மாநில அவையில் இப்போது ஒரு தமிழர் தெரிவாகி இருந்திருப்பார் என்ற கருத்தும் பரவலாக உரையாடப்பட்டது.

'கடந்த பத்து வருடங்களாக கட்சியின் ஆர்வமிக்க தொண்டராகவும், கட்சிமீதான பற்றுமிக்க உறுப்பினராகவும் செயற்பட்டுவந்தவர் என்ற அடிப்படையில்,எமது கட்சியால்தான் ஒன்றாரியோவில் உள்ள எம்மெல்லோருக்கும் ஒரு சிறப்பான எதிர்காலத்தை உறுதிப்படுத்த முடியும் என்று நம்புகிறேன்' என்று தெரிவிக்கும் நிமால் வினாயக மூர்த்தி அவர்கள் முதன் முதலாக ஒரு தேர்தல் களத்தில் நிற்கவென இறங்கியிருப்பவர். ஆயினும் அவரது சமூக அரசியல் நடவடிக்கைகல காரணமாகப் பரவலாக அறியப்பட்டவர்.

இந்தத் தொகுதியில் மார்க்கம் மாநகரசபை உறுப்பினர் லோகன் கணபதி அவர்களும் போட்டியிடவுள்ளார் என்று அவரது முகநூல் செய்தியொன்றை மேற்கோள் காட்டி பரவலாகப் பேசப்பட்டது. ஆயினும் அவர் அந்தக் முகனூல் செய்திக்கும் தனக்கும் சம்பந்தமில்லை என அறிவித்திருக்கின்றார். அவர் இதுவரை தேர்தலில் நிற்பது தொடர்பாக



எந்த முடிவும் எடுத்ததாகத் தெரியவில்லை

இந்தத் தொகுதிதியில் இவர்கள் இருரைத்தவிர இன்னமும் ஓரிரு தமிழர்கள் தேர்தலில் போட்டியிட முன்வரக்கூடும் என உறுதிப்படுத்தபடாத தகவல்கள் தெரிவிக்கின்றன. ஜனவரி முதல் டிசம்பர் வரையான காலப்பகுதிக்குள் இம்முடிவுகள் எடுக்கப்பட வேண்டும் என்ற ஒன்றரியோ பழமைவாதக் கட்சியின் திட்டத்தின் அடிப்படையில் இந்த வேட்பாளர் தெரிவு தை மாதத்தில் எடுக்கப்படுகிறது. எவ்வாறாயினும், மற்றைய கட்சிகள் தமது வேட்பாளர்கள் பற்றிய முடிவை எப்போது எடுக்கப் போகின்றன என்று அறிவிக்கவில்லை.

பீல் காவல்துறை அதிபரின் சட்டவிரோத நடவடிக்கை!



ஜென்னிஃபர் இவான்ஸ்

பிராம்ப்ரன், மிஸ்ஸிஸாகா இரண்டையும் உள்ளடக்கிய பகுதியே பீல் பிரதேசம். இந்தப் பகுதியின் காவல்துறை அதிபத் ஜென்னிஃபர் இவான்ஸ். வெள்ளைத் திமிர் கொஞ்சம் அதிகமுள்ளவர். பீல் பிரதேசக் காவல்துறை தொடர்பாகவும் பல இனவாதக் குற்றச்சாட்டுகள் உள்ளன. ஜென்னிஃபர் இவான்ஸும் (Jennifer Evans) அவருடைய மேன்மை தங்கிய தலைமையின் கீழ் ஏவல் புரியும் காவல்துறையினரும் Carding என்று பொதுவாக அழைக்கப்படும், " அவசியமற்று வெள்ளையரல்லாதோரைத் தெருவிலும் வாகனங்கள் ஓட்டும் போதும் மறித்து விசாரிக்கிற" நடைமுறையை அவசியம் எனக் கருதுபவர்கள். இது இனவாதம் எனபதை ஏற்றுக் கொள்ள மறுப்பவர்கள். கனடாவின் பல காவல்துறைகளில் இந்த நடைமுறை வழக்கில் இல்லை. பீல் பிரதேசத்தில் பெரும் அளவில் வெள்ளையர் அல்லாதவர்கள் வாழ்ந்தாலும் அதிகார அடுக்கு இன்னும் பழமை பேணும் வெள்ளையர்கள் கைகளிலேயே பெருமளவு இருக்கிறது.

சென்ற வாரம் கனடிய ஒலி/ஒளி பரப்புக் கூட்டுத்தாபனத்தின் (CBC) பிரபலமான காலை நிகழ்ச்சியான Metro Morning நிகழ்வில் அவரது நேர்முகம் இடம் பெற்றது. " தங்களுடைய அண்டை அயலை விட்டு (அவர் பயன்படுத்திய சொல் neighborhood) மற்றவர்ககளுடைய அண்டை அயலில் நடமாடுபவர்கள் எல்லோரும் சந்தேகத்துக்குரியவர்கள்தான்" என அந்த நேர்காணலில் இவான்ஸ் தெரிவித்தார்.

எங்களுடைய பெற்றோர் அல்லது உறவினர் வேறு வேறு இடங்களில் வசித்தாலும் அங்கு நாங்கள் நடமாட முடியாதா? என நேர் காணல்செய்தவர் கேட்டபோது."அது பொருத்த மான காரணம்தான்.எனினும்,மற்றவர் அண்டை அயலில் நீங்கள் நடமாடினால் காவல்துறைக் குச் சந்தேகம் வரும்தான்." எனப் பதில்தந்து கருத்தை மீண்டும் வலியுறுத்தினார்.

அவருடைய நியாயப்படி மாநிலத்தின் பலபாகங்களிலும் இருந்து வந்து தொறொன்ரோ பல்கலைக் கழகத்தின் மிஸ்ஸிஸாகா வளாகத்தில் கற்கும் ஆயிரக் கணக்கான மாணவர்களும் சந்தேகத்துக்குரிய வர்கள்தான்!!!. இவரது பிரதேசத்தில் வெள்ளை யர்களை விட மூன்றுமடங்கு அதிகமான அளவில் வெள்ளையல்லாதோர் காரணமின்றி தடுத்து நிறுத்தி விசாரிக் கப்பட்டுள்ளதாக அண்மையில் வெளியிடப்பட்ட தகவல் ஒன்று கூறுகிறது

கனடாவின் சுதந்திரங்களுக்கும் உரிமைகளுக் கான பட்டயம் (Canadian Charter of Rights and Freedom) கனடாவில் வாழ்பவர்கள் அனைவருக்கும் எழுந்தமானமாகக் கைது செய்யப்படுவதையோ, தடுத்து வைத்து விசாரிக்கப்படுவதையோ எதிர்க்கிறது. "காரணமின்றியும் உலவித் திரிவதற்கான" முற்று முழுதான சுதந்திரம் எங்களுக்கு உள்ளது.

அப்படியிருக்க, இவான்ஸ் அம்மணி இவ்வாறு தெரிவித்திருப்பது சட்ட விரோதமும் கூட. அவர் ஒன்றும் சட்டம் தெரியாமல் இப்படிப் பேசவில்லை. அவரது இனவாதம் தான் அவரை இப்படிப் பேச வைக்கிறது.

அவரது வெள்ளையல்லாதோர் மீதான வெறுப்புக்கு பீல் பிரதேச மக்கள் கொடுக்கக் கூடிய பதில் அவரைப் பதவியில் இருந்து விலகக் கோருவதும் அதற்கான நடவடிக் கைகளில் ஈடுபடுவதும்தான்.

ஓ! கனடா...

ஒன்றாறியோவின் வானத்தை நீலமாக்கும் முயற்சி!

– அபிஷ்டு

ஒன்ராறியோவின் வானம் முழுவதற்கும் நீல நிறத்தில் "பெயின்ற்" அடிக்கப் பலர் புறப்பட்டிருக்கிறார்கள். இன்னும் பலர் விரைவில் "பெயின்ற்" வாளிகளுக்காகக் காத்திருப்பதாகவும் தகவல். வானம் என்ன பச்சையா என்று நீங்கள் கேட்கக் கூடாது. அவ்வப்போது தேவைக்கும் வாய்ப்புக்கும் ஏற்றபடி நிறமாற்றமும் நிறப்பிரிகையும் செய்வது தமிழ் விழுமியமா அல்லது கனடிய விழுமியமா என்று சரியாகத் தெரியவில்லை. கெல்லி லீச் அம்மையாரைத்தான் கேட்க வேண்டும்.

கத்தலீன் வின் தலைமையிலான லிபரல் ஆட்சி பற்றிய பரவலான அதிருப்தி இருப்பதால் இத்தகைய நிறமாற்றங்கள் நிகழ்வதைக் காண்கிறோம்.

பழமைவாதக் கட்சியும் தனது மோசமான சில கொள்கைகளை மெல்ல மெல்ல விட்டுக்கொடுத்து விட்டது போலத் தோன்றுகிறது (உ+ம்: ஒருபாலாருக்கான சம உரிமை, பாலியல் கல்வித் திட்டத்தை ஆதரிப்பது, வசதி கருதியாயினும் வெள்ளையரல்லாத இனக்குழுமங்களை நாடிச் செல்வது). இது தேர்தலுக்கான உத்தியா அல்லது கோட்பாட்டு மாற்றமா என்பதை உறுதிப்படுத்தக் கால அவகாசம் வேண்டும். எனினும் அக் கட்சியின் மிக முக்கியமான ஒரு பிரிவினர் மிகுந்த தீவிரமான வெள்ளையின வலதுசாரிகள். இங்கிலாந்தின் "மகாராணி"யின் நிழலே சொர்க்கம் என்றும் கனடாவின் விழுமியம் என்றும் கருதுபவர்கள். பெண்களுக்கான சுதந்திரங்களையும் கருத்தடையையும் எதிர்ப்பவர்கள்.

இத்தகைய கருத்துள்ள அடிமட்டமே அந்தக் கட்சியின் வேராக இருக்கிறது. அந்த வேர் ஆழமாக இருக்கும் வரையிலும் மக்கள் நலன்களை மையப் படுத்திய பொருளாதாரக் கொள்கைகளுக்கு விரோதமாக அவர்கள் இருக்கும் வரையிலும் அந்தக் கட்சி பெரும்பணக்காரரரதும் பெருநிதிக் கூட்டுத் தாபனங்களதும் கட்சியாகவே இருக்கும்.

மக்கள் நலனைத் தனியார் மயப்படுத்து. வதால் வருகிற பெரும் எதிர்ப்பைக் கத்தலீன் வின்னும் இப்பொழுது உணர்ந்திருக்க வேண்டும்.

தேர்தல் திருவிழாவைக் கொண்டாட நாங்களும் "பெருமெடுப்பில்" தயாராகிறோம்!!


கெல்லி லீச்

கிறக்கம் தெளிய வேண்டும்!


மஹ்மூத் ஜபருல்லா

ஹார்ப்பர் அரசினால் கொண்டு வரப்பட்ட மிகவும் பாதகமான பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் சி51என்பதை உரிய முறையில் திருத்தி மாற்றுவதாக ஜஸ்ரின் ட்றூடோ அவர்கள் தேர்தல் காலத்தில் உறுதி மொழி வழங்கியிருந்தார். அடுத்த ஆண்டுத் துவக்கத்தில் இந்தச் சட்டத்தை மாற்றி அமைப்பது தொடர்பாக மக்களதும், அறிஞர்களதும் புலமையாளர்களதும் கருத்துக்களையும் ட்றூடோ அரசு கேட்க உள்ளது. யார் "பயங்கரவாதிகள்"?, எந்த எந்தப் போராட்டக் குழுக்களைப் பயங்கரவாதக் குழுக்களாக அறிவிக்கலாம்? இயக்கத்தில் உறுப்புரிமை பெற்றவரா இல்லையா என எப்படி முடிவு செய்வது? போராட்டக் குழுவுக்குத் தார்மிக ஆதரவு தந்தாலும் அது பயங்கரவாதமா? போன்ற பல விடயங்களில் முடிவு எடுக்க வேண்டி இருக்கும். ஹார்ப்பர் அர்சு கொண்டு வந்த சட்டத்தில் இந்தச் சிக்கல் எல்லாம் இல்லை! அரசாங்கம் யார் யாரைப் பயங்கரவாதி என்று முடிவு செய்கிறதோ அவரெல்லாம் சிறைக்குள். கதை முடியும்! ஹார்ப்பரின் சட்டத்தின்படி மோசமாகப் பாதிக்கப்பட்ட அப்பாவிகள் பட்டியல் நீண்டது.

இதனைப் பற்றிய அற்புதமான கனடியத் திரைப்படம் ஒன்றும் வெளியாகி இருக்கிறது. அதன் பெயர்: Secret Trial 5. (ஐவரின் இரகசிய வழக்கு).

"தேசியப் பாதுகாப்புச் சான்றிதழ்" (National Security Certificate) என்னும் சட்டத்தின் கீழ் தமிழர்கள் உட்படப் பலர் " பயங்கரவாதக்" குற்றச் சாட்டில் கைது செய்யப்பட்டு நீதி விசாரணைகளற்றுச் சிறையில் அடைக்கப்பட்டார்கள். அவர்களுக்கெதிரான் குற்றச் சாட்டுக்கள் என்ன என்பதையும் அரசாங்கம் தெரிவிக்கத் தேவையில்லை.

இந்தச் சட்டத்தின் கீழ்க் கைது செய்யப் பட்டுக் கிட்டத்தட்ட 20 ஆண்டுகள் சிறை யிலும் தடுப்புக் காவலிலும் இருந்தவர்களில் ஒருவர் மஹ்மூத் ஜபருல்லா. இந்த ஆண்டு மே மாதம் நீதி மன்றம் அவரை விடுதலை செய்து தீர்ப்பளித்து விட்டது. அவர் மீது எந்தக் குற்றமும் கிடையாது.

விடுமுறைக்காகக் கல்கரி நகருக்குக் குடும்பத்துடன் அவர் சென்றார். திரும்பி வரும்போது கல்கரி விமான நிலையத்தில் அவர் தடுத்து நிறுத்தப்பட்டார். விமானம் ஏற அனுமதி மறுக்கப்பட்டது. காரணம்: அவர் பெயர் கனடாவின் பயங்கரவாத No fly list என்னும் பட்டியலில் இருக்கிற தாம்.

நீதி மன்றம் அவரை விடுதலை செய்து விட்டாலும் அரசின் பழி வாங்கல் தொடர்கிறது. ஜபல்லாவின் விடுதலையை எதிர்த்து ட்றூடோ அரசு மேன்முறையீடு செய்தததது. அதிலும் அவர்களுக்குத் தோல்வி, மஹ்மூத் ஜபல்லா ஒரு அப்பாவி. அவரை விட்டு விடுங்கள். நீதிமன்றின் நேரத்தை வீணடிக்க வேண்டாம் என்பதே பின்னைய தீர்ப்பின் சாரம்.

எனவே, அடுத்த ஆண்டு இந்தச் சட்டத்தைத் தலை கீழாக மாற்றுவதற்குக் கனடியத் தமிழ்ச் சமூகம் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். லிபரல் கட்சியின் தமிழ் ஆதரவாளர்களும் ஜஸ்டின் ட்றூடோவின் கவர்ச்சியில் கிறங்கிக் கிடப்பவர்களும் விழித்தெழ வேண்டிய தருணம் இது.

‘எழுக தமிழில் மக்கள் திரள வேண்டுமென மனதார விரும்பினேன்’

வெளிப்படையாக பேசும் மாவை

எஸ்.என்.நிஷன்

தீபம்: தன்னை கொல்வதற்கு சதி நடப்பதாகவடக்குமுதலமைச்சரே பகிரங்கமாக கூறியிருக்கிறார். இது உண்மையெனில், பாரதூரமான விடயமல்லவா?

மாவை: முதலமைச்சரின் உயிருக்கு ஆபத்து என்பது பாரதூரமான விடயம். அவர் எங்களுடைய முதலமைச்சர். எங்கள் கட்சியைச் சேரந்தவர். அவரது உயிருக்கு ஆபத்து என அவரே பகிரங்கமாக முறையிட்டிருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கின்றது. முதல்வரின் பாதுகாப்பு தொடர்பாக உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். கட்சியின் தலைவர் இரா.சம்மந்தனைச் சந்தித்து நேரடியாகத் தெரியப்படுத்தியிருப்பதுடன் கடிதமும் அனுப்பி வைத்திருக்கிறேன்.

அத்தோடு நீதியான விசாரணை நடத்தி சூத்திரதாரிகள் யார் எனக் கண்டு பிடிக்கப்பட்டு அவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும்.

தீபம்: தமிழ்த் தேசியக் கூட்;டமைப்பின் ஆதரவுடன் அமைக்கப்பட்டுள்ள நல்லாட்சி அரசாங்கத்தின் நல்லிணக்கச் செயற்பாடுகள் திருப்திகரமானதாக உள்ளதா?

மாவை: அதில் நாங்கள் திருப்தியாக இருக்கிறோம் என்று நூற்றுக்கு நூறு வீதம் சொல்லமாட்டோம். அதற்கான ஆதாரங்களை சொல்லுவேன். ஐ.நா மனித உரிமைகள்பேரவையின் அறிக்கைவருவதற்கு ஒரு மாதத்திற்கு முன்னர், மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை முழுமையாக நிறைவேற்றவில்லை என்றும் அதில் சில விடயங்கள் ஓரளவு முன்னேற்றம் இருக்கிறதென்றும் மிகப் பெரும்பாலான விடயங்கள் நடைபெறவில்லை என்றும் கட்சித் தலைவர் சம்மந்தன் பாராளுமன்றத்திலேயே கூறியிருக்கின்றார்.

அடுத்தததாக ஐ.நா பொதுச் செயலாளர் பான்கீ மூன் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த போது ஐ.நாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் பல விடயங்களை அரசு செய்யவில்லை என்பதை எடுத்துக் கூறியிருக்கிறோம். பௌத்த மயமாக்கல் தொடர்பிலும், தமிழ் மக்களின் பிரச்சனைகளைத் தீர்ப்பதில் அரசு இன்னும் அதிகம் அக்கறை காட்ட வேண்டுமென்பதையும் கூறியிருக்கிறோம்.

எங்களுக்குள்ள கவலை அரசியலமைப்பு திருத்தம் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெற வேண்டும். பின்னர் கருத்துக் கணிப்பிற்கு போக வேண்டும். எந்த வகையிலும் இனவாத சக்திகளுக்கு இடமளிக்காதிருந்தால்தான் கருத்துக் கணிப்பில் வெல்ல முடியும்.





தீபம்: நல்லாட்சியில் அதிருப்தியுடன் இருப்பதாக சொல்கிறீர்கள். வழக்கம் போல இந்த அரசும் தமிழர்களை ஏமாற்றுமென நினைக்கிறீர்களா?

மாவை: யாழ்ப்பாணத்தில் வைத்து ஐ.நா செயலாளர் பான்கீமூனுக்கு சில விடயங்களை தெளிவாக சொல்லியுள்ளோம். அதாவது இந்த அரசும் தமிழர்களை ஏமாற்றுமாக இருந்தால் வடக்கு கிழக்கு மாநிலங்களில் இலங்கை அரசு ஆட்சி செய்ய முடியாதளவிற்கு நாங்கள் செயற்பட வேண்டியிருக்கு மென்று கூறியுள்ளோம். அது ஆயுதப் போராட்டமல்ல. ஆனால் மக்களை அணி திரட்டி போராடுவோம். அதற்கு நீங்கள் ஆதரவாக இருக்க வேண்டுமென்றும்; கேட்டிருக்கின்றோம்.

அரசியலமைப்பு சட்டம் நிறைவேற்றப்படவிருக்கின்ற நிலையில் இந்த அரசில் நம்பிக்கை இழந்து விட்டோமென்ற தீர்மானத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ தமிழரசுக் கட்சியோ இன்னமும் எடுக்கவில்லை.

தீபம்: அரசியலமைப்பு உருவாக்கம் தொடர்பில் பேசப்பட்டுக் கொண்டிருக்கின்ற நிலையில் அந்த அரசியலமைப்பு தொடர்பில் விளக்கமுடியுமா. அந்த அரசியலமைப்பில் வடக்கு கிழக்கு இணைப்புத் தொடர்பில் குறிப்பிடப் படுகின்றனவா?

மாவை: அரசியலமைப்பு திருத்தத்திற்காக ஆறு குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கிறன. அந்த ஆறு குழுக்களில் நான் உட்பட கூட்டமைப்பு உறுப்பினர்களும் அங்கம் வகிக்கின்றார்கள். அந்தக் குழுக்களின் அறிக்கைகள் வந்தபின்னர்தான் இடைக்கால அறிக்கை தயாரிக்கப்பட இருக்கிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சம்மதம் இன்றி இடைக்கால அறிக்கையை வெளியிட மாட்டார்கள் என்று நம்புகிறோம்.

அந்த வழிகாட்டல் குழு எத்தகைய அறிக்கையை தயாரிக்கப் போகின்றார்கள் என்பதை எங்களுக்குச் சொல்லும் போது தான் நாங்கள் அதனை ஏற்பதா இல்லையா, திருத்தங்களைச் சமர்ப்பப்பதா என்பதை தீர்மானிக்க முடியும்.

நாங்கள் சமஸ்டி தன்மை வாய்ந்த அரசியலமைப்பு முறை இருக்க வேண்டுமென்று முன்மொழிந்திருக்கின்றோம். அடுத்ததாக வடக்கு கிழக்கு இணைக்கப்பட வேண்டும். எப்படி இணைப்பது என்பது தொடர்பாக ஆராய்கிறோம். இணைப்பு தொடர்பாக நான்கைந்து முன்மொழிவுகள் உள்ளன. அதில் முஸ்லிம்களுடைய உரிமையும் உள்ளடக்கப்பட வேண்டும்.

இப்பொது அதனை சொல்வதன் மூலம் நிறைவு பெறாத அந்த திருத்தத்தில் இணக்கங்களை ஏற்படுத்துவதிலும் முறையான அரசியல் தீர்வை ஏற்படுத்துவதிலும் பங்கம் விளைந்துவிடும என்ற காரணத்தால்தான் நாங்கள் அதனைப் பற்றி இப்போது பேசுவதை தவிரத்து வருகின்றோம்.

தீபம்: வடக்குகிழக்கு இணைப்பு என்பது முஸ்லிம் மக்களின் சம்மதம் இல்லாமல்

தொடர்ச்சி 5-ம் பக்கம்

4-ம் பக்க தொடர்ச்சி

அல்லது அவர்கள் திருப்திப்படும் அதிகார அலகு வழங்கப்படாது சாத்தியப்படுமா? இணைந்த வடக்கு கிழக்கு என்றால்; அதில் முஸ்லீம் மக்களின் நிலையென்ன? முஸ்லீம் மக்களின் அதிகார அலகு தொடர்பாக தமிழ்தேசிய கூட்டமைப்பின் நிலைப்பாடு என்ன?

மாவை: வடக்கு கிழக்கு இணைப்பு தொடர்பாக எல்லா முஸ்லிம் கட்சிகளும் எதிர்த்திருக்கிறார்கள் என்ற கருத்தை நான் ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்களுக்குள்ளும் போட்டா போட்டிகள் இருந்து அவர்களது அரசியலுக்கும் ஏற்ப கருத்துக்களைக் கூறி வருகின்றனர்.

சந்திரிகா பண்டாரநாயக்கா முன்வைத்த அரசியல் தீர்வில் வடக்கு கிழக்கு இணைப்புத் தொடர்பான ஒருபகுதி பாராளுமன்றத்திலும் முன்வைக்கப்பட்டுள்ளது. அஷ்ரப்பின் இணக்கமும் அதற்கு கிடைத்தது. இதுபற்றிய சர்ச்சைகள் சில இப்பொழுது கிளப்பப்பட்டுமுள்ளன.

வடக்கு கிழக்கு இணைப்புக்கு எதிராக உயர் நீதிமன்றில் தொடுக்கப்பட்ட வழக்கின் தீர்ப்பிலும், இணைப்பை நடைமுறைப் படுத்தியதில்தான் தவறு என்று கூறினார்களே தவிர இணைக்கக்கூடாதென்று கூறவில்லை. மகிந்த ராஜபக்ச காலத்தில் நடத்தப்பட்ட பேச்சில் மாற்று திட்டம் பற்றி பேச்சு நடத்தினோம். மகிந்தவின் காலத்தில் இந்த விவகாரத்தை முன்னகர்த்த முடியவில்லை.

இப்போது எங்களிடமிருக்கின்ற பிரேரணைகளும் எதிர்பார்ப்புக்களும் வடக்கு கிழக்கை இணைக்க வேண்டும். முஸ்லீம் கட்சிகளுடனும் இது பற்றி பேசி வருகிறோம். முஸ்லீம் மக்களின் உரிமைகளை அங்கீகரித்து, பொருத்தமான அதிகார அலகொன்று உருவாகும். ஏற்கனவே சந்திரிகா பண்டாரநாயக்காவால் முன்வைக்கப்பட்ட சமஷ்டித் தன்மை வாய்ந்த ஒற்றையாட்சியை ஒழித்து பிராந்தியங்களின் ஒன்றியம் அரசியல் தீர்விலே குறிப்பிட்டவாறு அம்பாறை மாவட்டத்தை உள்ளடக்கிய முஸ்லிம் அலகை உருவாக்குவது போன்றவற்றையெல்லாம் ஆராய்கிறோம்.

தீபம்: எழுக தமிழ் பேரணி தொடர்பில் தென்னிலங்கையில் வெளியிடப்படும் எதிர்வினைகளை கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளில் ஒன்றான தமிழரசுக் கட்சி எவ்வாறு பார்க்கின்றது?



மாவை: எழுக தமிழ் நிகழ்வில் கலந்து கொள்வதன் மூலம் அரசாங்கத்தின் மீது நம்பிக்கை இழந்து விட்டோம் சர்வதேசத்தில் நம்பிக்கை இழந்து விட்டோம் என்ற கருத்தை வெளியிட மற்றவர்களுக்கு சந்தர்ப்பம் அளிக்கக் கூடாதென்பதற்காகதான் நாங்கள் அதில் கலந்து கொள்ளவில்லை. நாங்கள் ஜெயசேகரம் வீட்டில் பேரவையின் உறுப்பினர்களுடன் கலந்துரையாடியபோது தெளிவாக பலவற்றை சொல்லியிருக்கின்றோம். இன்னும் இரண்டு மாதங்கள் பொறுத்தால் இந்த அரசியலமைப்பு எவ்வாறு அமையப் போகின்றதென்ற முடிவிற்கு நாங்கள் வரலாம். அப்பொழுது உங்களுடன் நாங்கள் கலந்து பேசுவோம். ஒத்துப் போகவில்லை என்றால் அடுத்த கட்டச் செயற்பாடுகள் தொடர்பிலும் கலந்து பேசலாம் என்றும் கூறியிருந்தோம். அதனை அவர்களும் ஏற்றுக் கொண்டிருந்தார்கள்.

புத்தர்சிலைவைப்பது தொடக்கம் அரசாங்கத்தின் பல நடவடிக்கைகளில் அவர்களின் நிலைப்பாட்டுடன் நாம் வேறுபடவில்லை. இந்த விடயங்களை எதிர்க் கட்சித் தலைவர் ஊடாக பாராளுமன்றத்தில் பேசியிருக்கிறோம். அது சர்வதேசத்திற்கும் தெரியப்படுத்தப்பட்டிருக்கின்றது.

பொதுமக்கள் இந்த பிரச்சனைகளிற்கு எதிர்ப்பு தெரிவித்து போராடினால் நாங்கள் எதிர்க்க மாட்டோம். அதனை நாங்கள் மதிக்கின்றோம் என்றும் குறிப்பிடுகின்றோம். மக்கள் பேரவையின் அந்தக் குழு அதனைச் செய்வது நல்லது. தாங்கள் அந்த பேரணியைச் செய்வதானது கூட்டமைப்பிற்கும்; பக்க பலமாக இருக்குமென்றும் கூறியிருக்கின்றார்கள்.

எங்களுக்குள்ள கவலை அரசியலமைப்பு திருத்தம் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெற வேண்டும். பின்னர் கருத்துக் கணிப்பிற்கு போக வேண்டும். எந்த வகையிலும் இனவாத சக்திகளுக்கு இடமளிக்காதிருந்தால்தான் கருத்துக் கணிப்பில் வெல்ல முடியும். இதனால்த்தான் நாம் பேரணியில் கலந்து கொள்ளவில்லை.

இன்னொன்றையும் சொல்ல வேண்டும். எழுக தமிழ் சமயத்தில் எனக்குள்ளிருந்த ஆதங்கத்தை பலருடன் பேசியிருக்கிறேன். முக்கியமான மக்கள் பிரச்சனைகளை முன்வைத்து, எங்களுக்கும் உடன்பாடான விடயங்களை முன்வைத்து இப்படியொரு போராட்டத்தை நடத்துகிறார்கள், இதில் மக்கள் கலந்து கொள்ளாமல் விட்டால் இந்த விடயங்களை மக்கள் ஏற்கவில்லையென்ற தவறான அபிப்பிராயம் உருவாகி, பெரும் சறுக்கல் ஏற்பட்டுவிடுமென்ற பயமிருந்தது.

மக்களிற்காக நூற்றுக்கணக்கான போராட்டங்களில் ஈடுபட்டு, சிறையிருந்த நான் மக்கள் போராட்டங்களை எதிர்க்கவோ, குழப்பவோ மாட்டேன். அப்படி இப்பொழுது சிலர் குற்றம்சாட்டுவதை நினைக்கதான் கவலையாக உள்ளது.

தீபம்: முதலமைச்சர் விக்கினேஸ்வரனை இனவாதியாகச் சித்தரித்து தென்னிலங்கையில் போராட்டங்கள் நடக்கிறதே?

மாவை: அவ்வாறான போராட்டங்களை நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம். அவர் கூறிய கருத்துக்கள் இனவாதக் கருத்துக்கள் அல்ல. அதனை நடத்திய முறை அல்லது அந்தக் கூட்டத்தில் அரசியல் தலைவர்களும் கலந்து கொண்டதால்தான் அப்படியானதொரு நிலை வந்திருக்கின்றது. அவ்வாறானதொரு நிலை வந்திருந்தாலும் அவர்கள் எழுப்பிய விடயங்கள் பிழையான விடயங்கள் அல்ல.





ஹாவார்ட் பல்கலைக்கழக தமிழ் இருக்கைக்கான நிதிதிரட்டலுக்காக ஆடலும் பாடலும் களிப்புமாக

வெற்றிகரமாக நிகழ்ந்த அக்னி இசைவிழா!

ஹார்வேர்ட் பல்கலைக் கழகத்தில் தமிழ் இருக்கைக்கான நிதிதிரட்டலை நோக்கமாகக் கொண்டு கனடிய தமிழர் பேரவையினால் ஒழுங்கு செய்யப்பட்டு நடாத்தப்பட அக்னி இசைவிழா கடந்த ஞாயிறன்று ஸ்காபரோ தமிழ் இசைக் கலாமன்ற மண்டபத்தில் நடைபெற்றது. உலகெங்கும் வாழ்கின்ற தமிழ் மக்கள் மத்தியில் செய்யப்பட்டுவரும் இந்த நிதிதிரட்டல் முயற்சியின் ஒரு அங்கமாகவே கனடிய தமிழ் கங்கிரசின் இந்த நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

முழுக்க முழுக்க கனடிய தமிழ் கலைஞர் களை மட்டும் கொண்டு நடாத்தப்பட்ட, மண்டபம் நிறைந்த பார்வையாளர்களைக் கொண்டிருந்த இந்த நிகழ்வு மாலை ஆறரை மணியளவில் ஆரம்பித்து,இரவு 11 மணிவரை நடைபெற்றது. இனிய இசையுடன் கூடிய பாடல்களாலும் நடனங்களாலும் களை கட்டியிருந்த இந்தச் சபையில் பாடிய ,நடனமாடிய கலஞர்கள் மற்றும் இந்த இசை நிகழ்வை நடாத்திய அக்னி குழு என அனை வரும் இந்த நிதிசேர் நிகழ்வுக்காக உணர்வு பூர்வமாக எந்தவித ஊதியமும் பெறாமல் தமது பங்களிப்பை வழங்கியிருந்தனர். இந்த சபையில் ஹார்வேர்ட் பல்கலைக்கழகத் தில் ஒரு தமிழ் இருக்கையை கொண்டு வருவதற்கான முயற்சியை தொடக்கி வைத்தவர்களான வைத்திய கலாநிதிகளான ஜானகிராமன் அவர்களும், ஞானசம்பந்தன் அவர்களும் கலந்துகொண்டது ஒரு சிறப்பம்சமாகும். இவர்கள் இருவரும் சேர்ந்து, 6 மில்லியன் டொலர் தேவைப்படும் இந்தத் திட்டத்துக்கு, தமது பங்களிப்பாக 1 மில்லியன் டொலர்களை முதலாக வைத்து இந்த நிதி திரட்டலை ஆரம்பித்துள்ளனர் என்பது தீபம் வாசகர்கள் அறிந்ததே.

இந்த விழாவின் மூலமாகவும், இந்த நிதிதிரட்டல் முயற்சிக்காகவும் இதுவரை சேர்க்கப்பட்ட தொகையான 50,000டொலர்களை, விழா மேடையில் வைத்து, கனடாவில் இந்த நிதிசேர் திட்டத்தைப் பொறுப்பேற்று வெற்றிகரமாக நடாத்திவரும் சிவன் இளங்கோ, எழுத்தாளர் முத்துலிங்கம் ஆகியோர் ஜானகிராமன், ஞானசம்பந்தன் மற்றும் இவர்களுடன் ஈணைந்து இயங்கிவரும் போல் பாண்டியன் ஆகியோரிடம் கையளித்தனர்

இந்த விழாவில் சபையிலிருந்த பார்வை யாளர்கள் அனைவரதும் நெஞ்சைத்தொட்ட இரண்டு விடயங்கள் நடைபெற்றன. ஒன்று சுப்பர் சிங்கர் நிகழ்ச்சி மூலமாக உலகப் புகழ்பெற்றபாடகியாக அறியப்பட்ட ஜசிக்கா ஜூட் தொடர்பானது. இந்த இசை நிகழ்வில் கலந்துகொண்டு அவர் தனது இனிய குரலில் பாடல்களும் பாடி சபையினரின் பலத்த கரகோசங்களைப் பெற்றுக்கொண்டது மட்டுமல்லாமல், இந்த நிதிதிரட்டலுக்கான விழா நிகழப்போவதாக அறிந்ததன் பின்ன ரான இடைப்பட்ட காலத்துள் தான் செய்த இசை நிகழ்ச்சிகள் மூலமாக தனக்குக் கிடைத்த ஊதியமான 5000 டொலர்களை தனது பங்களிப்பாக வழங்கியதுடன், இந்த நிகழ்வில் பங்கு பற்றிய மற்றக் கலைஞர் களுடன் இணைந்து இசை நிகழ்வில் பங்கு பற்றிச் சிறப்பித்துமிருந்தார். 11ம் ஆண்டில் கல்விபயிலும் இச் சிறுவயதிலேயே, தனக்குக் கிடைக்குக் வெகு மதிகளையும் பணத்தையும் நன்கொடையாக வழங்கி வரும் அவரது செயல் முழுமண்டபத்தினதும் மனதை தொட்ட ஒரு நிகழ்வாகும்.

அடுத்த நிகழ்வு, நினைவுகள் புகைப்படக் கலைஞர்கணா ஆறுமுகம் அவர்கள் சம்பந்தப் பட்டது, இந்த நிதிசேர் நடவடிக்கைக்கு தனது பங்களிப்பை எப்படிச் செய்வது என்று தான் நினைத்தது, அதன்பின், ஒரு நிதிசேர் நடவடிக்கையாக, தனது சேகரத் திலுள்ள புகைப்படங்களை முகநூல் வழியாக விற்பனை செய்ய நினைத்தது, அந்த முறையின் மூலமாக நிதி திரட்ட முய்ற்சி எடுத்தது என்பவை பற்றி அறிவித்ததுடன் தனது இந்தப் பரீட்சார்த்த முயற்சி, எதிர்பாராதஅளவுக்கு அவருக்கு வெற்றியைத் தேடித் தந்திருக்கிறது என்று அவர் தெரிவித்தார். முகநூலில் பதிவு செய்த முதல் நாளிலேயே தன்னால் ஆயிரம் டொலர்களை திரட்ட முடிந்தது என்றும், இன்றுவரை 7,000 டொலர்கள் சேர்ந்திருப்பதாகவும் அவர் தெரிவித்து அதையும் கனடிய தமிழர் பேரவையின் இந்த நிகழ்வுக்கானதனது பங்களிப்பாக தருவதாக அறிவித்தார். அது மட்டுமல்லாமல், 25,000டொலர்களை நவம்பர் மாதமுடிவுக்குள் தன்னால் திரட்டிவிட முடியும் என்றும் அந்த உச்ச எல்லையை அடைந்தவுடன் அந்தத் தொகையையும் இந்த நிதிசேர் முயற்சிக்கு வழங்குவேன் என்று அறிவித்தார். இது நெஞ்சைத்தொட்ட இரண்டாவது நிகழ்வு

இந்த இரண்டு அறிவிப்புக்களாலும் அக்னியின் சிறப்பான ஒழுங்கமைப்புடன் கூடிய இசை மழையாலும் மனம் நிறைந்த ஒரு மாலையை கழித்த மனம் நிறைந்த உணர்வுடன் ரசிகர்கள் பேசிக்கொண்டதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

நிகழ்வின்போது எடுக்கப்பட்ட சில ஒளிப்படங்களை இங்கே காணலாம்.

படங்கள்: நன்றி நினைவுகள்.com















கிழக்கு : தமிழ்-முஸ்லிம் மோதல்களின் உலைக்களம்

கிழக்கில், தமிழ் முஸ்லிம் மக்களுக்கிடையே இன நல்லுறவு பற்றி சிறிதளவில் பேசப்படுகிறதெனினும் தொடர்ந்தும் கிழக்கு தமிழ்முஸ்லிம் உறவுகளில் 'மோதல் களின் உலைக்களமாகவே' இருந்து வருகிறது.

தமிழ்முஸ்லிம் மக்களிடையிலான முரண்கள், கிழக்கு மாகாணசபைத் தேர்தலின் போதுகொதிநிலை பெற்றிருந்து, தற்போது மீண்டும் கொதி நிலையைப் பெற்றிருக்கிறது.

அண்மைக் காலத்தில் குறிப்பாக 'நீண்ட கால இனப்பிரச்னைக்குத்

தீர்வை உள்ளடக்கிய அரசியல் யாப்புச் சீர்திருத்தம்' ஒன்றுக்கான நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் மேற்கொண்டு வருகிற அண்மைக்காலத்தில் இந்தக் கொதிநிலையை கிழக்கு மீண்டும் அடைந்திருக்கிறது.

"கிழக்கில் முஸ்லிம் அரசியல் கட்சிகள், வடக்குகிழக்கு இணைப்புக்கு எதிராக, முஸ்லிம் கிராமங்கள் தோறும் பிரச்சாரம் மேற்கொண்டு வருகிறார்கள்" என்ற செய்தி இந்தக் கொதிநிலையைத் தொடக்கி வைத் திருக்கிறது. இந்தப் பிரச்சாரப் பணியில் முஸ்லிம்களின் பிரதான அரசியல்சக்தியான முஸ்லிம்காங்கிரஸ்தவிர்ந்துஏனைய கட்சிகள் ஈடுபட்டுள்ளன எனத்தெரிவிக்கப்படுகிறது.

முஸ்லிம் கட்சித் தலைவர்கள் பலரும் வடக்குகிழக்கு இணைப்புக்கு எதிராகப் பகிரங்கமாகப்பேசிவருகிறார்கள். இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிசாட் பதியுதீன், 'வடக்கும் கிழக்கும்இணைக்கப்படக்கூடாது. அவ்வாறான நிலை ஏற்பட்டால் பதவிகளைத் துறந்துவிட்டு வீதிகளில் இறங்கிப் போராடுவோம்.' எனத் தெரிவித்திருக்கிறார். தேசிய காங்கிரஸ் தலைவர் அதாவுல்லாவும் வடக்குகிழக்கு இணைப்பிற்கு எதிராகவே பேசிவருகிறார்.

முஸ்லிம்களிடமிருந்து மாற்று அரசியல் சக்தியாக வெளிக்கிளம்பிய நல்லாட்சிக்கான மக்கள்முன்னணியினருக்கும் இரா.சம்பந்த னுக்குமிடையிலான சந்திப்பின் போது, "1990 இன் பயங்கர அனுபவங்கள், ஆழமான வடுவாக முஸ்லிம் மக்களின் மனதில் பதிந் துள்ளன. எனவே வடக்குகிழக்கு இணைப்பு தொடர்பில் முஸ்லிம் மக்களின் உணர்வு களை மதிக்க வேண்டும். அந்த அடிப்படையி லேயே அரசியல் தீர்வு விடயம் அனுகப்பட வேண்டும். எல்லோரது இணக்கத்துடன்தான் இந்த விடயம் குறித்த இறுதி நலைப்பாட்டுக்கு வரவேண்டும்." எனதெரிவித்திருக்கிறது நல்லாட்சிக்கான மக்கள் முன்னணி.

வடக்கு கிழக்கு இணைப்பு விவகாரத்தில் முஸ்லிம்களின் பிரதான அரசியல் சக்தி யான முஸ்லிம் காங்கிரஸ் மௌனம் காத்து வருகிறது. இது, கிழக்கில் முஸ்லிம் காங்கிரசுக் கெதிரானபோக்கை உருவாக்கியிருக்கிறது. இப்பின்னணியே கிழக்கில் முஸ்லிம் காங்கி ரசுக்கெதிரான "கிழக்கின் எழுச்சி" போராட் டத்தை தோற்றுவித்திருக்கிறது.

விடயங்களை பகிரங்கமாகப் போட்டு உடைத்துவிடக்கூடாது எனக்கூறி மௌனம் காத்து வந்தரவூப் ஹக்கீம், தற்போது "வடக்கு கிழக்கை இணைப்பதற்கு முஸ்லிம் காங்கிரஸ் தலைமைஇணங்கிவிட்டது என்பதில் எவ்வித உண்மையுமில்லை." எனத் தெரிவித்திருக்கிறார். இதற்குமுன்னர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தனின் இணக்கப்பாட்டுக் கான அழைப்பினை அடுத்து, "சேதாரம்

தொடர்ச்சி 14-ம் பக்கம்

- விஜே



நூல் வெளியீடு:

குழப்பத்திற்கு யார் காரணம்?

நிதர்சன்

இந்தியாவில் வசிக்கும் மு.திருநாவுக்கரசின் இலங்கை அரசியல் யாப்பு தொடர்பான நூல் வெளியீடு அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடந்தபோது பெரும் சர்ச்சைகள் ஏற்பட்டுள்ளன. குழப்பங்கள், சர்ச்சைகளுடன் கூட்டம் நிறைவுபெற்றுள்ளது. இந்த நிகழ்வு தமிழ் அரசியல்சூழல் பற்றிய பல்வேறு அச்சங்களையும் உருவாக்கி விட்டுள்ளது. தமிழர்களால் ஜனநாயகம், பன்மைத்துவம் என்பவற்றை கற்றுக் கொள்ளவே முடியாதோ என்ற சந்தேகமும் எழுகிறது.

காங்கேசன்துறை வீதியிலுள்ள நாச்சிமார் கோவிலுக்கு அருகாமையிலிருக்கின்ற ராஜா திருமணமண்டபத்தில் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் தலைமையில் புத்தக வெளியீடு நடைபெறுமென விளம்பரப் படுத்தப்பட்டிருந்தது.

நிகழ்வு மேடையில் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், கஜேந்திரகுமார், அனந்தி, சுரேஷ் பிரேமச்சந்திரன் போன்றவர்கள் அமர்ந்திருந்தார்கள். அரசியல்மேடையில் இவர்கள் எதிர்எதிர் நிலைப்பாட்டில் இருப்பவர்கள். ஆனால் மனிதர்கள். எதிரெதிர் அரசியல் நிலைப்பாட்டில் இருப்பவர்கள் நேரில் சந்திக்கும்போது குசலம் விசாரிப்பதும், சாதாரணமாக உரையாடுவதும் சாதாரணமானது. ஆனால் நம்மவர்கள் காலையிலிருந்தே முகப்புத்தகத்தில் அலப்பறை பண்ண தொடங்கிவிட்டார்கள். சுமந்திரனும், கஜேந்திரகுமாரும் அருகருகில் இருக்கும் புகைப்படங்களை நிகழ்வு ஆரம்பிக்க முன்னரே பதிவேற்றி, 'இரண்டு துருவங்கள்', 'அருகருகில் சிங்கங்கள்' என்பது மாதிரியான சினிமாபாணி வசனங்களை அடித்துவிட்டுக் கொண்டிருந்தார்கள். இந்த ரசிக மனோபாவத்தின் வெளிப்பாடு என்னவென்றால், இருவரும் சந்தித்தால் மோதல்தான். அது இன்னும் சற்று நேரத்தில் ஆரம்பித்துவிடும் என்பதே.

தமிழர்கள் பிரிந்திருப்பது கையாள்பவர்களிற்கு இலகு. தமிழர்கள் தமது உரிமை விவகாரத்திலாவது ஒன்றுபட்டு செயற்பட வேண்டும். ஆனால் துரதிஸ்டவசமாக எதிர்எதிர் கட்சி அரசியல்தான் நடத்துகிறார்கள். கொள்கை, அரசியல் நிலைப்பாடுகள் குறித்த பகிரங்க விவாதமெல்லாம் தமிழ் சூழலில் அறவே இல்லை.

இந்தவகையான அரசியல் தமிழர்களிற்கு உதவாது. தனிநபர் அரசியல் அல்லாது இனத்தை முன்னிலைப்படுத்திய அரசியல் பார்வையை வளர்த்து இந்தவகையான பார்வையுள்ளவர்கள் மாறிக்கொள்ள வேண்டும். சுமந்திரனும், கஜேந்திரகுமாரும் சாதாரணமாக அருகருகாக அமர்ந்துபேசி தமது அரசியல் முதிர்ச்சியை வெளிக்காட்டினாலும், மோதலை எதிர்பார்த்து ஒருகுழு செயற்படுகிறதென்பதே உண்மை.

நிகழ்வின் தலைமையுரையை யாழ் பல்கலைக்கழக பேராசிரியர் சிற்றம்பலமும், வரவேற்புரையை விரிவுரையாளர் க.அருந்தாகரனும், நூலாய்வினை ஊடகவியலாளர் வ.தேவராஜாவும் நிகழ்த்தினர்.

இந்த சமயத்தில், நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள், பேச்சாளர்களின் முக்கிய பொறுப்புணர்ச்சியொன்று பற்றி குறிப்பிட்டேயாக வேண்டும். சர்ச்சையை ஏற்படுத்தும், எதிர் அரசியல் போக்குள்ள கட்சி பிரதிநிதிகளை அழைத்து கலந்துரையாடல் நிகழ்த்துவதெனில், அதிக அக்கறையெடுத்துக் கொள்ள வேண்டும். எந்தெந்த பரப்பிற்குள் பேச்சாளர்கள் நுழையலாம், சர்ச்சையை தோற்றுவிக்கும் உணர்வுபூர்வ விடயங்களிற்குள் நுழையாமல் விடுவதை உறுதி செய்ய வேண்டும். ஏனெனில், தமிழ் மேடையென்பது இன்னும் ஜனநாயகப்படாதது. ஆந்த ஜனநாயகப்பண்பை கட்டியெழுப்புவதெனில் சிறுகச்சிறுகத்தான் முன்னகரலாம்.

ஐரோப்பிய தேர்தல்களின் முன் போட்டியாளர்கள் பகிரங்க விவாதத்திற்கு செல்வதெல்லாம் நமக்கு சரிப்படாது. தேவையெனில் வேட்பாளர்களிற்குள் தலையணை சண்டை, ஆதரவாளர்களிற்குள் கயிறுழுத்தல் போட்டி வைக்கலாம். இந்த பண்பை வளர்த்தெடுப்பது நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களின் பொறுப்பு. அன்றைய நிகழ்ச்சியில் அது இருக்கவில்லை. ஆலய திருவிழாக்காரர்கள் 'முதன்முறையாக ஒரே மேடையில் ஒன்பது இசைக்குழு' என விளம்பரம் செய்வது மாதிரியாக அரசியல்மேடைகளிற்கு விளம்பரம் செய்வது முக்கியமல்ல. அதனை சிறப்பாக நடத்தியும் முடிக்க வேண்டும். ஏற்பாட்டாளர்களிடம் அந்த வல்லமை இல்லையென்பதே சிக்கல்களின் முதற்காரணம்.

அதேபோல, பேச்சாளர்களின் பொறுப்புணர்வும் முக்கியம். அவர்கள் மக்கள் பிரதிநிதிகள். அல்லது பிரதிநிதித்துவத்திற்காக காத்திருப்பவர்கள். ஆரோக்கியமான ஜனநாயக வெளியை உருவாக்கும் பெரும் தார்மீக பொறுப்புணர்வு வாய்ந்தவர்கள். தேவையெனில் குத்தல் பேச்சுக்கள் விசிலடிச்சான் குஞ்சுகளை உசுப்பேற்றலாம். அல்லது, இந்த மாதிரி எதிர்பாளர்களை உசுப்பேற்றும். இதற்கப்பால் வேறெந்த பலனையும் தராது. தமிழர்களின் பிரதிநிதிகள் அல்லது பிரதிநிதிகளாக வர முயல்பவர்கள் இந்த வகை அரசியலை கடந்து வெளியில் வர வேண்டும். இன்னும் கட்சி அரசயலை நடத்தாமல், மக்களை அல்லது தேசத்தை முன்னிறுத்திய அரசியல் செய்பவர்களின் மேடையில் இந்தவகை சர்ச்சைகள் தோன்றாதென்பதே உண்மை.

இரண்டாவதாக, பார்வையாளர் தரப்பில் உட்கார்பவர்கள் கடைப்பிடிக்கவேண்டியது. எதிரான நிலைப்பாடுடையவர் எனினும், கருத்தை சொல்வதற்கு அவருக்குள்ள உரிமையை மதிக்க வேண்டும். நீ பேசிக்கொண்டிருக்கும் ஒரு வார்த்தையும் எனக்கு சம்மதமில்லை, ஆனால் அதை பேசும் உன் உரிமைக்காக உயிரையும் கொடுக்கவும் சம்மதம் என்பார் பிரெஞ்ச் தத்துவாசிரியர் வோல்ட்ரேயர்.

ஆனால் அன்றைய நிகழ்ச்சியின் பார்வையாளர்கள் நடந்து கொண்டது மாறாக. குறிப்பாக சுமந்திரன் உரையாற்றியபோது எழுப்பப்பட்ட எதிர்ப்பு புரிந்து கொள்ளவே முடியாதது. தமிழ்தேசிய மக்கள் முன்னணியுடன் அடையாளப்படுத்தப்பட்ட சில இளைஞர்கள் எழுந்து கண்மூடித்தனமாக எதிர்ப்பை வெளியிட்டனர். அறிவுபூர்வ உரையாடல்கள், எதிர்ப்பு வெளிப்படுத்தப்படவில்லை. சுமந்திரனிற்கு எதிர்ப்பு வெளியிட்ட இளைஞர் எழுகதமிழ் மேடையிலும் தோன்றியவர். ஒரு மாபெரும் மக்கள் போராட்ட மேடையில் தலைகாட்டிய இளைஞர், அந்த மக்கள் எழுச்சிக்கும் மரியாதை செய்ய வேண்டும். இப்படி கூட்டங்களில் குழப்பங்கள் ஏற்படுத்தினால், அந்த நபர்களை கொண்டு எழுக தமிழ் மக்கள் எழுச்சியையும் கொச்சை செய்ய வாய்ப்பாகிவிடும். இந்த குழப்பத்தை அல்லது எழுக தமிழை கட்சி விவகாரமாக சுருக்கிவிடவும் முடியும். கருத்துக்களை செவிமடுக்க பழகிக்கொள்வதும் மாபெரும் கலையே.

தமிழர்கள் பிரிந்திருப்பது கையாள்பவர்களிற்கு இலகு. தமிழர்கள் தமது உரிமை விவகாரத்திலாவது ஒன்றுபட்டு செயற்பட வேண்டும். ஆனால் துரதிஸ்டவசமாக எதிர்எதிர் கட்சி அரசியல்தான் நடத்துகிறார்கள். கொள்கை, அரசியல் நிலைப்பாடுகள் குறித்த பகிரங்க விவாதமெல்லாம் தமிழ் சூழலில் அறவே இல்லை. எதிரெதிர் நிலைப்பாடெனிலும் ஒரே மேடையில் விவாதிக்கும் புதிய சூழலை ஏற்படுத்த வேண்டிய அவசிய தேவை உள்ளது. அப்படியென்றால்த்தான் தமிழ் ஜனநாயகப் பரப்பு செழிக்கும். ஆனால், அன்றைய நிகழ்வு அதற்கு சாம்பல்தான் போட்டுள்ளது. இன்னொரு பல்கட்சி மேடையென்றதும் தலைவர்களிற்கு அசௌகரியத்தை ஏற்படுத்தும் விதமாக அன்றைய புத்தக வெளியீடு முடிக்கப்பட்டுள்ளது.

பல்வேறு நிலைப்பாடுடையவர்கள் பேசும் மேடையை வளர்க்க, தமிழ் ஜனநாயகத்தை செழிக்க செய்ய வேண்டும். அதற்கு பார்வையாளர்கள் மட்டும் பங்காளிகள் அல்ல. நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள், தலைமை வகிப்பவர், பொறுப்புணர்ந்து பேசுபவர்கள் என எல்லோருடைய பங்கும் அவசியம்.

இந்த நிகழ்ச்சி சர்ச்சையில் தொடர்புபட்ட ஒவ்வொருவரும் எற்பாட்டாளர்கள், பேச்சாளர்கள், அரங்கிலிருந்து சர்ச்சையில் ஈடுபட்டோர் சுயவிமர்சனம் செய்து கொள்வது அவசியம். அன்றையதினம் நாங்கள் சரியாக நடந்து கொண்டோமா என. அதிலிருந்தே தெளிவு பிறக்க முடியும்.







– குப்பிழான்
ஐ.சண்முகன்

1968 செப்டெம்பரில் எனக்கு எழுதுவினைஞர் நியமனம் கிடைத்த போது இலங்கைப் பல்கலைக்கழகத்தின் பேராதனை வளாகத்தில் இரண்டாம் வருட கலைமாணி மாணவனாக இருந்தேன். நான் பொதுக் கலைமாணிப் பரீட்சை எழுதுவதற்கு இன்னும் ஒரு வருடம் பேராதனை வளாகத்தில் படிக்க வேண்டும். ஆனால் அதற்கிடையில் இந் நியமனம் கிடைத்தது. எனக்கு மனக் கிலேசத்தைத் தந்தது. படிப்பைத் தொடர்வதா?, நியமனத்தை ஏற்பதா?



ஒரு இலக்கியக்காரனின் வாழ்பனுபவங்கள் 8

என்று தத்தளித்தேன். இரண்டொரு நண்பர்களைத் தவிர மற்ற நண்பர்களும் உறவினர்களும் நியமனத்தை ஏற்குமாறு வலியுறுத்தினார்கள். படிப்பதற்கான இந்த வாய்ப்பை இழக்கக் கூடாது. தொடர்ந்து படி என்று ஆலோசனை கூறியவர்களுள் எனது நண்பரான பிற்காலத்தில் புகழ் பெற்ற இரசாயனவியல் ஆசிரியராக இருந்த ஆ.மகாதேவன் முக்கியமானவர்.

எனது வீட்டின் பொருளாதார நிலமையும் மிக மோசமாக இருந்தது. எனக்கும் தொடர்ந்து படிக்க வேண்டுமென்ற ஆசை இருந்தபோதும் எல்லா நிலமைகளையும் யோசித்து நியமனத்தை ஏற்பதாகவே முடிவு செய்தேன். என்றாலும் பல்கலைக்கழகத்தில் படித்த இரண்டு வருடங்களிலும் எனது பாடங்களான தமிழ், பொருளியல், ஐரோப்பிய வரலாறு சார்ந்து பல அறிஞர்களிடமும் படித்தேன் என்பதில் ஒரு திருப்தி இருந்தது. மூன்றாம் வருடத்தில் பேராசிரியர் வி.செல்வநாயகத்தின் இலக்கிய விமர்சன வகுப்புகளிலும் பேராசிரியர் சி.தில்லைநாதனின் வகுப்புகளிலும் கலாநிதி இந்திரபாலாவின் இலங்கை வரலாற்று வகுப்புகளிலும் படிக்க வேண்டுமென ஆவலோடு எதிர்பார்த்திருந்தேன். அவற்றை இழக்கின்றோம் என்பது மிகுந்த மனவருத்தத்தைத் தந்தது.

இந்நிலையில் சில நெருங்கிய நண்பர்களும் சில உறவினர்களும் சிறிது நம்பிக்கையைத் தந்தார்கள். “உனது வேலைத்தளம் கண்டி அல்லது பேராதனையாக இருக்குமானால் ஏதோவொரு வகையில் கல்வியைத் தொடரக் கூடியதாக இருக்கும். எனவே அதற்கான வழிவகைகளைத் தேடு” என அறிவுறுத்தினார்கள்.

எங்கள் ஊரைச் சேர்ந்த ஒருவர் கொழும்பில் ஒரு பெரிய பதவியிலிருக்கின்றார் என்றும், அவர் மிகுந்த ஊர் அபிமானம் கொண்டவர் என்றும், இப்படியான பிரச்சனைகளில் உதவக் கூடியவர் என்றும் சொன்னார்கள். அவரைப் பற்றி விசாரித்ததில் எனது உறவினரான திரு. சிவசுப்பிரமணியம் (கிளாக்கர்) “அவர் தனக்குப் பரீட்சயமானவர் என்றும், அவருடன் கதைத்து உதவி பெறுவோம்” என்றும் கூறினார்.

குறிப்பிட்ட நாளில் உறவினரும் நானுமாக கொழும்பு புறப்பட்டோம். கொழும்பில் இலங்கை மின்சாரசபையின் பிரதம கணக்காளராக பதவியிலிருந்த எங்கள் ஊரைச் சேர்ந்த திரு. விஸ்லிங்கம் அவர்களைச் சந்தித்தோம். நீண்டகாலமாக ஊரைவிட்டு தொலைவில் உத்தியோகம் பார்த்தாலும், திருமணபந்தத்தாலும் அவர் ஊருடனான தொடர்புகள் அற்ற நிலையிலிருந்தார். ஊரவரான எங்களைக் கண்டு மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். தனது பழைய நினைவுகளை அசைபோட்டு எங்களுக்கும் சொன்னார். அந்தக் காலத்தில் ஊரில் தோட்டம் இறைப்பதற்காக காலையில் துலா மிதித்து இறைத்து விட்டு அந்தரம் அந்தரமாக பாடசாலைக்குப் போன கதைகளையும் சொன்னார்.

நாங்கள் அவரைச் சந்திக்க வந்த விடயத்தைச் சொன்னோம். எனக்குக் கிடைத்த நியமனக் கடிதத்தை வாங்கிப் பார்த்தார். நீர் பாதுகாப்பு அமைச்சில் ஒரு எழுதுவினைஞனாக நியமனம் பெறுகின்றீர் என்ற குறிப்பைப் பார்த்து, உமக்குக் கண்டிப் பொலிஸ் நிலையத்தில் நியமனம் கிடைக்க ஏற்பாடு செய்யலாம் என்று சொன்னார். அங்கு ஆங்கிலத்தில் வேலை செய்ய வேண்டிவரும் சமாளிப்பீரா என்று கேட்டார். ஆங்கிலத்தில் சொல்வது எழுதுதல் மாதிரி ஒரு பரீட்சையும் எனக்கு வைத்துப் பார்த்தார். அதில் திருப்தி அடைந்த அவர், தொலைபேசியில் பாதுகாப்பு அமைச்சில் யாருடனோ தொடர்பு கொண்டு அதற்கான ஏற்பாடுகளைச் செய்தார். “சரி உனக்கு கண்டி பொலிஸ் நிலையத்தில் நியமனம் கிடைக்கும்” என்றும் சொன்னார்.

குறிப்பிட்ட தினத்தில் எங்களை பாதுகாப்பு அமைச்சுக்கு அழைத்துச் செல்வதற்காக தனது பகுதியில் எழுது வினைஞனாக தொழில் புரிந்த ஒரு சிங்கள உத்தியோகத்தரையும் ஏற்பாடு செய்தார். எனது நியமனக் கடிதத்தை வாங்கிப் பார்த்த உத்தியோகத்தர் எங்களுக்கு ஓர் பேரதிர்ச்சியைத் தந்தார். கல்வி அமைச்சில் அல்லவா உமக்கு நியமனம் கிடைத்திருக்கிறது என்று சொன்னார்.

நாங்கள் எல்லோரும் குழம்பிப் போனோம். நியமனக் கடிதத்தை திரும்பவும் வாசித்துப் பார்த்ததில் சிங்கள மொழியில் கல்வி அமைச்சு என்றும், தமிழ் மொழி பெயர்ப்பில் பாதுகாப்பு அமைச்சு என்றும், இருந்தது. சிங்களமொழியில் எழுதப்பட்டதே ஏற்றுக் கொள்ளப்படும் என்பதால் கல்வி அமைச்சிற்கே நான் செல்லவேண்டியதாயிற்று.

துரதிஷ்டவசமாக கல்வி அமைச்சில் திரு விஸ்வலிங்கத்திற்கு எவரையுமே தெரிந்திருக்க வில்லை. எனவே அவரால் எனக்காக எதுவும் செய்யமுடியாதிருந்தது. என்றாலும் அந்த சிங்கள உத்தியோகத்தரால் ஏதாவது செய்ய முடியுமா பாரென்று எங்களுடன் அனுப்பி வைத்தார். அவராலும் எதுவும் செய்ய முடியவில்லை.

கல்வி அமைச்சில் இரண்டு மூன்று தமிழ் இளைஞர்களும் எட்டுப் பத்து சிங்கள இளைஞர்களும் முதல் நியமனத்திற்காகக் காத்திருந்தோம். உரிய அதிகாரிகள் வந்து எங்கள் எல்லோருக்குமாக லொத்தர் குலுக்கிப் போட்டார்கள். எனக்கு இன்னும் இரண்டு மூன்று பேருக்கும் கொழும்பு எனக்கிடைத்தது. மூன்று நான்கு சிங்கள இளைஞர்களுக்கு கண்டி எனவும் கிடைத்தது. வேறு சிலருக்கு வெவ்வேறு இடங்கள் கிடைத்தன. அந்த நிலையில் கூட கண்டி எனக் கிடைத்த ஒரு சிங்கள் இளைஞனுடன் நான் ஒத்துமாறியிருக்கலாம். அவர்களும் கொழும்பில் நியமனம் பெற விரும்பியிருக்கலாம். அவர்களும் கொழும்பில் நியமனம் பெற விரும்பியிருக்கலாம். ஆனால் சரியாக வழிகாட்டுவோரின்மையாலும், மொழிப் பிரச்சனை காரணமாகவும் என்னால் அவ்வாறு செய்ய இயலவில்லை.

இப்படியாக கொழும்புப் பரீட்சைத் திணைக்களத்தில் நான் எழுது வினைஞனாக நியமனம் பெற்றேன். 1976 ஜனவரியில் நான் யாழ்ப்பாணத்திற்கு இடமாற்றம் பெறும் மட்டும் ஆறு வருடங்களுக்கு மேற்பட்ட காலங்கள் அங்கேயே பணிபுரிந்தேன். அப்போதும் கூட ஒரு நண்பருடன் பேராதனைக்கு ஒத்து மாறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தேன். எல்லாம் சரிவரும் தறுவாயில் வெண்ணெய் திரண்டு வர தாழி உடைந்த கதை போல நண்பர் காலை வாரி விட்டுவிட்டார். என்றாலும் என்னுடன் பேராதனையில் உடன் படித்து கொண்டிருந்த நண்பர்களின் உதவியால் குறிப்பாக முல்லைத்தீவைச் சேர்ந்த கந்தசாமி என்ற நண்பரின் உதவியால் இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை பேராதனைக்குச் சென்று கட்டுரை வகுப்புக்களில் கலந்து கொண்டேன். அதனால் 1969 இல் இறுதிப் பரீட்சைக்குத் தோன்ற முடிந்தாலும் அதில் தோல்வி அடைந்து 1970 ஆம் ஆண்டு பரீட்சைக்குத் தோன்றி பட்டதாரியானேன்.

எனக்காக கண்டி பொலிஸ் நிலைத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட நியமனத்தை வேறோர் சண்முகலிங்கம் பெற்றார் என்பதும், அவரும் பல்கலைக்கழக மாணவரென்பதும் வேறு கதை.



சுய நிதி முகாமைத்துவம்–1

கடன் என்னும் மாயவலை!

கடன் என்பது இன்று நாம் ஏதாவது பெரிய தேவைகளுக்காக மட்டும் பெற்றுக்கொள்ளும் ஒன்றாக இல்லை. கடன் அட்டைப் பாவனை காரணமாக நாம் தினமும் கடனிலேயே ஓடிக்கொண்டிருக்கிறோம். நமது வாழ்க்கையின் தவிர்க்க முடியாத அங்கமாக ஆகிவிட்ட கடன் அட்டைகள் பற்றி அறிந்து வைத்திருப்பது நம் எலோருக்கும் அவசியம். அதைப்பற்றிக் கொஞ்சம் பார்க்கலாம்.

உங்களுக்கு இரண்டு தெரிவுகள் இருக்கின்றன என்று வைத்துக்கொள்ளுங்கள். ஒன்று உடனடியாக மிகச் சந்தோஷமான விடுமுறை ஒன்றை எடுப்பது. அதற்கான செலவைக் கடனாகப் பெற்றுக்கொண்டு விடுமுறை முடிந்து வந்தபின்னர் ஆறு மாதங்களுக்கு வேலை செய்து விடுமுறைக்கான கடனைக் கட்டி முடிப்பது. இரண்டாவது தெரிவு முதலில் ஆறு மாதம் வேலை செய்து காசு சேர்த்து, அதே விடுமுறையை சேர்த்த காசில் ஆறு மாதங்களின் பின்னர் எடுத்துக்கொள்வது. நீங்கள் எதைத் தெரிவு செய்வீர்கள்?

மனிதர்கள் தமது சந்தோஷத்தை அதிகரித்துக்கொள்வது என்றால் இரண்டாவது முடிவைத்தான் தெரிவு செய்ய வேண்டும் என்று ஆய்வாளர்கள் சொல்கிறார்கள். ஏனென்றால் ஒரு சந்தோஷமான விடுமுறைக்காக பணத்தை சேமிப்பதில் கூட முதல் ஆறு மாதமும் நாம் மகிழ்வடைகிறோம். பின்னர் சேர்த்தபணத்தினை பெருமையுடன் செலவிடுகின்றோம். ஆனால் கடன் பட்டால் விடுமுறையை குற்ற உணர்வில் செலவிட்டு பின் கடனையும் வருந்தி வருந்தியே அடைக்க வேண்டி வரும் என்கிறது நடத்தை உளவியல். ஆனால் நான் எப்படியும் சேர்த்துப்பிடிக்க மாட்டேன், முதலாவது தெரிவுதான் எனக்குச் சரிவரும் என்று சொல்பவர்களும் நம்மிடையே இருக்கின்றார்கள்.

கொஞ்சம் கொஞ்சமாக காசு சேர்த்து வீடு, வாகனம் என்று வாங்கிய காலம் எல்லாம் இப்போது இல்லை. சம்பாதிக்க முன்னரே செலவழிக்க எம்மைப் பழக்கி விடும் இந்த நுகர்வுக் கலாசாரத்தில் ஏற்கனவே செலவிட்டுவிட்ட பணத்துக்காக எப்போதும் ஓடிக்கொண்டே இருக்கிறோம்.

கடன் என்பது நாம் வாழும் சூழலில் ஒரு தவறான விடயமோ, தவிர்க்கப்பட வேண்டிய விடயமோ அல்ல. அது அவசியமானதும்கூட. ஆனால் நமது கடன் தெரிவுகள் ஆராய்ந்து எடுக்கப்பட்டவையாக, திட்டமிடப்பட்டவையாக அமைவது அவசியம். நமது சமூகத்தினர் பலர் விழும் மிகப்பெரிய படுகுழி கடன் அட்டைகள். அவற்றை ஆரம்பம் முதல் சரியான வகையில் பாவித்தல் மிகவும் அவசியம்.

கடன் அட்டைகள் என்பவை ஒரு குறுங்கால சுழல் முறைக் கடன் வசதிக்கானவை. இவை நீண்ட கால தேவைகளுக்காக பயன்படுத்தப்பட வேண்டியவை அல்ல. கடனைக் கட்டி முடித்த பின்னர் மீண்டும் அதேயளவு கடனை அதில் பெற முடியும். பெரும்பாலான அட்டைகள் இரண்டு வாரங்களுக்கு வட்டியில்லாக்கடனைக் கொடுக்கின்றன. ஆனால் வட்டி என்று வந்து விட்டால் கடன் அட்டைகளின் வட்டி மிக அதிகம்.

கடன் அட்டைகள் என்பவை நாம் வங்கியில் பெற்றுக்கொள்பவை மட்டுமல்ல. பல்வேறு வியாபார நிறுவனங்கள் தமக்கேயுரிய கடன் அட்டைகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்குகின்றன. இவற்றைப் பாவிப்பதனை ஊக்குவிப்பதற்காக பல சலுகைகளையும் வழங்குகின்றன. நாம் இப்போது அட்டைகளை உட்செலுத்தி அடையாள இலக்கத்தை அழுத்தக்கூடத் தேவையில்லை. சும்மா தட்டிவிட்டாலே போதும், காசு காற்றில் போவது என்பதற்கு சரியான உதாரணம் இதுதான். இப்போது அட்டைகளைக்கூட வெளியே எடுக்கத் தேவையில்லை. செல்லிடத் தொலைபேசி முலம் கூட பணம் செலுத்தும் வசதி வந்துவிட்டது. எப்படிக் கொடுத்தாலென்ன? வாங்க வேண்டியதைத்தானே வாங்குகின்றோம் என்கிறீர்களா? நம்மில் பெரும்பாலானவர்களைப் பொறுத்தவரை அது உண்மையல்ல. பணம் கொடுப்பது எவ்வளவுக்கெவ்வளவு இலகுவாக இருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு நாம் அதிகம் செலவு செய்வதாக உளவியல் ஆய்வுகள் கூறுகின்றன.

Canadian Tire, Costco, Wallmart போன்ற பல அமைப்புக்களின் கடன் அட்டைகளை நாம் எல்லோரும் ஏதாவது ஒரு வேளை பாவித்திருப்போம். இந்த நிறுவங்களின் வியாபாரம் இந்த அட்டைகளால் குறிப்பிடத்தக்களவு அதிகரிக்கிறது என்பது உங்களுக்குத் தெரியுமா? நேரத்துக்கு கடனை அடைக்காமல் பல கவனயீனமான வாடிக்கையாளர்கள் கட்டும் வட்டி அதற்கு மேலதிகம். உங்கள் உளவியலை நீங்கள் அறிந்திருப்பதை விட அதிகமாக இந்த வர்த்தக நிலையங்கள் அறிந்திருக்கின்றன. இதைத் தவிர்ப்பதற்கு நாம் ஒவ்வொருவரும் நமது கடன் அட்டை நடவடிக்கைகளை மிகக் கவனமாக முகாமைத்துவம் செய்தல் அவசியம்.

கடன் அட்டைகள் ஒரு மிகப்பெரும் நஷ்டமாக நம்மில் பலருக்கு மாறிவிடுதன் காரணம் அதன் வட்டி வீதங்களை அறிந்து சரியான தேதிகளில் பணத்தினை செலுத்தி அதனைப் பாவிக்கத் தவறுகின்றமை தான். கடன் அட்டைக் கடன் என்பது வசதியானது தான். ஆனால் இரண்டு வாரம் அல்லது ஒரு மாதத்துக்குள்ளான கடன் வசதியாகத்தான் இருக்க வேண்டும். அதனை கையில் இருக்கும் காசு போல பயன் படுத்தக்கூடாது. உங்கள் நடைமுறைக் கணக்கில் ஏற்கனவே இருக்கும் பணம் அல்லது ஓரிரு நாட்களில் கையில் வரப்போகும் பணத்துக்காக மட்டுமே இந்தக் கடனைப் பெற வேண்டும். இல்லையென்றால் மேற்குறிப்பிட்ட எந்தப்பயனையும் உங்களால் அடைய முடியாதது மட்டுமல்ல நீங்கள் ஒரு மீளமுடியாக் கடனாளியாக மேலும் மேலும் ஆகிக்கொண்டிருப்பீர்கள். ஏனெனில் வட்டி அதிகரிக்க அதிகரிக்க எம்மால் அதைனைக் கையாள முடியாமல் போகும். கடன் அட்டையச் சரியாகப் பாவிப்பது தொடர்பான சில நல்ல பழக்கவழக்கங்களை ஏற்படுத்திக்கொள்வது எல்லோருக்கும் நல்லது. இது பற்றி மேலும் அடுத்த வாரம் பார்க்கலாம்.

– அரசி

ஐ.நா.வின் சிறுபான்மையினர் தொடர்பான விசேட அறிக்கையாளர் வடபகுதி விஜயம்

ஐ.நா.வின் சிறுபான்மையினர் தொடர்பான விசேட அறிக்கையாளர் ரீட்டா இஷாக் நாடியா,கடந்த புதன்கிழமை (ஒக்டோபர், 12) வடபகுதிக்கான விஜயத்தை மேற்கொண்டதுடன்வடமாகாணசபை உறுப்பினர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியிருக்கிறார்.

ரீட்டா இஷாக் நாடியா, வடமகாண முதலமைச்சர் இல்லாத காரணத்தினால் வடமாகாண சபைகல்வி அமைச்சர், சுகாதார அமைச்சர் ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடியிருக்கிறார்.

இச்சந்திப்புக் குறித்து கருத்து வெளியிட்டுள்ள வடமாகாண கல்வி அமைச்சர், சந்திப்பு 45நிமிடங்கள் வரை நீடித்தது. சிறுபான்மை மக்களாக உள்ள தமிழ் மக்களுக்கு நடைபெறும்அட்டூழியங்கள் தொடர்பில் அவர் கேட்டறிந்து கொண்டார் எனத் தெரிவித்திருக்கிறார். மேலும், நாட்டில் சிறுபான்மை இனமான தமிழ் மக்களுக்கு பெரும்பான்மை இனத்தவருடனானநல்லிணக்கம் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளதா? என்பது தொடர்பாகவும் அவர்கேட்டறிந்து கொண்டார் எனவும் தெரிவித்திருக்கிறார் வடமாகாண கல்வி அமைச்சர்.

இச்சந்திப்பின் போது, இலங்கையில் சிறுபான்மையினமாக உள்ள தமிழ் மக்களுக்குநடைபெறும் அட்டூழியங்கள் தொடர்பில் ஆராய்ந்த விடயங்கள் தொடர்பாக ஐ.நா.மனிதஉரிமை ஆணையகத்திற்கு அறிக்கை ஒன்றினை சமர்ப்பிப்பேன் என ரீட்டா இஷாக் நாடியாஉறுதிமொழி வழங்கியதாகவும் வடமாகாண கல்வி அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

யாழ்.விஜயத்தை முடித்தக் கொண்டு வியாழன் வவுனியா சென்ற ரீட்டா இஷாக் நாடியா,வன்னியிலுள்ள சிவில் அமைப்புக்களைச் சந்தித்து, தற்போதைய நிலை மற்றும்சிறுபான்மையினரின் நிலை தொடர்பாக கலந்துரையாடியுள்ளார்.







ஈழச் செய்திகள்

"இந்திய இழுவைப்படகு பேச்சுவார்த்தையில் வடமாகாண முதலமைச்சர் உள்வாங்கப்படவேண்டும் ! " -மாவட்ட கடற்தொளிலாளர் சம்மேளனம்.

இந்திய இழுவைப்படகுகளின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் முகமாக எதிர்வரும் 5 ஆம்திகதி மீண்டும் இலங்கைஇந்தியப் பிரதிநிதிகள் மற்றும் கடற்றொழிலாளர்களிடையே பேச்சுவார்த்தை நடைபெறவுள்ள நிலையில், இப்பேச்சுவார்த்தையில் ஆக்கபூர்வமான முடிவுகளை எடுக்கக்கூடிய வடமாகாண முதலமைச்சர் மற்றும் சம்மேளனங்களின் பிரதிநிதிகள்உள்வாங்கப்படவேண்டும்என்ற கோரிக்கையை விடுத்திருக்கிறார்கள்யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க சமாசங்களின் சம்மேளனம்.

கடந்த செவ்வாய் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், சம்மேளத்தின் தலைவர் வே.தவச்செல்வன் இக்கோரிக்கையை விடுத்திருப்பதுடன், இவ்வாறானவர்கள் இக்குழுவிலிருந்து புறக்கணிக்கப்பட்டால் பேச்சுவார்த்தை நடைபெறும் நாட்களில் முழுஅளவில் கடற்றொழிலாளாகளை திரட்டி யாழ்.இந்திய துணைத்தூதரகம், வடமாகாண ஆளுநர்அலுவலகம் என்பவற்றை முற்றுகையிட்டு தொடர் போராட்டங்களை நடாத்தப் போவதாகவும் தெரிவித்திருக்கிறார்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த சம்மேளத்தின் தலைவர், இந்திய இழுவைப்படகுகளின்பிரச்சினைகளுக்குதீர்வு காணும் முகமாக மீண்டும் இருநாட்டுப் பிரதிநிதிகள் மற்றும்கடற்றொழிலாளர்களிடையே எதிர்வரும்5ஆம்திகதிபேச்சுவார்த்தையினை நடாத்துவதற்குதீர்மானிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் யாழ்.மாவட்டத்தில் உள்ள 128 சங்கங்களை அங்கத்துமாகக் கொண்ட யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க சமாசங்களின்சம்மேளனத்திற்கு நடைபெறவுள்ள பேச்சுவார்த்தை தொடர்பான எந்த அறிவிப்புக்களும்விடுக்கப்படவில்லை. பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களிடம் எந்த தகவல்களையும் பெற்றுக்கொண்டு பேச்சு வார்த்தை நடத்தவும் இல்லை. தனியே இரு நாடுகளும் தமது நலன்களை பாதுகாத்துக் கொள்வதற்காக இப்பேச்சுவார்த்தை நடாத்தப்படுகின்றதா என்ற கேள்வி எமக்குளழுந்துள்ளது. ஏனெனில் மீனவர்களின் பிரதிநிதிகள் இப்பேச்சுவார்த்தைக்குஅழைக்கப்படவில்லை எனவும் தெரிவித்திருக்கிறார்.

எனவே, முதலில் கடற்றொழிலாளர்களின் நலன்களை பாதுகாத்துக் கொள்வதற்கென உள்ளசம்மேளனத்துடன் பேச்சுவார்த்தை மேற்கொள்ளப்பட வேண்டும். இல்லையேல் எமதுபிரச்சினைகள் தொடர்பாக பேசித்தீர்மானங்கள் எடுத்துக் கொள்ளக் கூடிய வடமாகாணமுதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் இப்பேச்சுவார்த்தையில் உள்வாங்கப்பட வேண்டும்எனவும் தொவித்திருக்கிறார் சம்மேளத்தின் தலைவர்.

பாசிக்குடாவில் சுற்றுலாத்துறையினால் மீனவர்களின் உரிமை பாதிக்கப்பட்டுள்ளது

பாசிக்குடாவில் சுற்றுலாத்துறையினால் மீனவர்களின் உரிமை பாதிக்கப்பட்டுள்ளது,சுற்றுலாத்துறை மக்களின் நலனுக்கு மாறாகவே இருக்கின்றது எனத் தெரிவித்திருக்கிறார்சுவிஸ் காணி உரிமைச் செயற்பாட்டளார் அலன் வூவி.

பாசிக்குடாவில்தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற காணிஉரிமை மற்றும் மனித உரிமை தொடர்பான கலந்துரையாடலில் கலந்து கொண்டு,பாசிக்குடாவில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்திருக்கிறார் அலன்வூவி.

பாசிக்குடாவில் உள்ள மீனவர்கள், தமது காணிகளை விட்டு வெளியேற வேண்டும் என்ற பிரச்சினை உருவாகியதை அடுத்து இந்தக் கலந்துரைடயால் தேசிய மீனவ ஒத்துழைப்புஇயக்கத்தினால் முன்னெடுக்கப்பட்டது. இக்கலந்துரையாடலில், இயக்கத்தின் அமைப்பாளர் கேமன் குமார, மட்டக்களப்பு இணைப்பாளர் பு.சசிகரன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

கலந்துரையாடலில் பேசிய அலன்வூவி, சுற்றுலாத்துறை சம்பந்தமாக எந்தவொரு கலந்துரையாடலும் மக்களுடன் நடத்தப்படவில்லை. அதிக காணிகள் சூறையாடப்பட்டுள்ளன. சிறு மீனவர்கள் பாதிப்பில் உள்ளனர். சாதாரண மக்களுக்கு எந்தவிதமான பலாபலனும் கிடைக்கவில்லை. பாதுகாப்பு படையினர் அதிகமான சுற்றுலா விடுதிகளை நடத்துகின்றனர். ஆகவே சாதாரண மக்களின் காணி உரிமை மீறப்பட்டுள்ளது. சுற்றுலாத்துறை இருப்பதுமக்களின் நலனுக்காகவே. ஆனால் இங்கு எதிர்மாறாக உள்ளது எனத் தெரிவித்ததுடன், இந்தநிலை தொடருமானால் வெளிநாட்டில் இருந்து வருபவர்கள் பாசிக்குடாவுக்கு செல்வதைதடைசெய்ய நேரிடலாம் எனவும் தெரிவித்திருக்கிறார்.

யாழ்.முஸ்லிம் மக்களின் மீள்குடியேற்றத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பங்களிப்புபோதியளவில் இல்லை - சுபியான்

எமது மக்களின் மீள்குடியேற்றத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பங்களிப்பு போதியளவில்இல்லை எனத் தெரிவித்திருக்கிறார் யாழ்.மாநகர சபை முன்னாள் உறுப்பினர்பி.எஸ்.எம்.சுபியான்.

ஒக்டோபர் 26 ஆம் திகதி, வடமாகாண முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டு 26 வருடங்கள் நிறைவடைவது தொடர்பிலும் முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் தொடர்பிலும் கருத்துவெளியிடுகையிலே இவ்வாறு தெரிவித்திருக்கிறார் சுபியான்.

அவர், வடமாகாண முஸ்லிம் மக்கள் தொடர்பாக கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள்அவ்வப்போது கருத்துக்களை கூறி வருகின்றனர். அது வெறும் வார்த்தைகளாகவேஇருக்கின்றன. இவ்வாறே தான் எமது மக்களின் மீள்குடியேற்றத்தில் தமிழ் தேசியகூட்டமைப்பின் பங்களிப்பு என்பது போதியளவில் இல்லை. இதில் அக்கறை இன்றிகூட்டமைப்பினர் இருப்பது மிக வேதனையாக இருக்கிறது எனவும் தெரிவித்திருக்கிறார்.

மேலும், இன்று வடமாகாண சபை, யாழ்.முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்திற்கு உதவிசெய்வதான ஒரு மாயையை கூட்ட



மைப்பின் ஊடாக தேசியப் பட்டியல் மூலமாக தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர் அய்யூப் அஸ்மீன் மேற்கொண்டு வருகிறார். மாகாண சபையினால்அவருக்கு ஒதுக்கப்படுகின்ற 60 இலட்சம் ரூபா நிதியைக் கொண்டு சில உதவிகளை செய்துவிட்டு, அதனை செய்தியாக மீண்டும் மீண்டும் பிரசுரித்து அதிகளவான உதவிகள் என காட்டமுயல்கின்றனர் எனவும் தெரிவித்திருக்கிறார் சுபியான்.

ஆகவே இந்த விடயங்களை, உதவித் திட்டங்களை வைத்துக் கொண்டு வடக்கு மாகாண சபையாழ்.முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்திற்கு உதவுகின்றது அல்லது கூட்டமைப்பு உதவுகின்றது என யாரேனும் சொல்வார்களே ஆனால் அது நிச்சயமாக யாழ்.முஸ்லிம் மக்களை ஏமாற்றுவதாகவே கருத வேண்டியுள்ளது எனவும் கருத்து வெளியிட்டிருக்கிறார் சுபியான்.



உடலுக்குப் பயன்மிகு

கற்றாழை

கற்றாழை பூக்கும் தாவர இனத்தைச் சேர்ந்த ஓர் பேரினமாகும். இது ஆற்றங் கரைகளிலும், சதுப்பு நிலங்களிலும், தோட்டங்களிலும் பயிராகும். நுனியில் பெரும்பாலும் சிறு முட்களுடன் காணப் படும். மடல், வேர் ஆகியவை மருத்துவப் பயனுள்ளவை. அழகு சாதனப் பொருட்கள் தயாரிப்பில் கற்றாழை பெருமளவு பயன்படுத்தப்படுகின்றது.

பெரும்பாலான கற்றாழை இனங்களுக்கு ரோஜா இதழ்கள் போன்ற பெரிய அமைப்பும், தடிமனான சதையுள்ள இலைகளும் இருக்கும். பெரும்பாலான கற்றாழை இனங்கள் தண்டுகள் இல்லாமல் காணப்படும். இது தரையிலிருந்து நேரடியாக ரோஜா இதழ் போன்ற அமைப்பில் வளரும்;. சில வகைகளில், கிளைகளுடன் கூடிய அல்லது கிளைகள் இல்லாத தண்டு இருக்கலாம். இதில் சதையுள்ள இலைகள் இருக்கலாம். அவை சாம்பல் நிறத்திலிருந்து ஆழமான பச்சை வரை நிறத்தில் வேறுபடுகின்றன. சிலநேரங்களில் அவை ஒரே நிறமாகவோ பல வண்ணங்களாகவோ இருக்கலாம்.

இவை வறட்சியான சூழ்நிலையில் கடல் மட்டத்திலிருந்து 1000 அடி உயரம்வரை உள்ள மலைப்பிரதேசங்களில் வளர்கின்றது. இதன் இலைகள் தடிமனாகவும், சிறிது சிவப்புக் கலந்த பச்சை நிறத்தில் 30 முதல் 60 சென்ரி மீற்றர் நீளமாகவும், சிறிய முட்களுடனும் இருக்கும். கற்றாழையின் பூக்கள், குழாய் வடிவத்திலும், அதிகமாக மஞ்சள், இளம் சிவப்பு அல்லது சிவப்பு நிறங்களிலும், அடர்த் தியான கொத்துகளாகவும் இருக்கும். எப்பொழுதும் வாடாத பெரணி வகையைச் சார்ந்த இத்தாவரம், வெப்பமான பகுதி களில் வயல் வரப்புகளிலும் உயரமான பகுதிகளில் வேலிகளிலும் வளரக்கூடியது. சதைப்பற்றுள்ள நீர்ச்சத்து மிக்க இக்குறுஞ் செடி பல பருவங்கள் வாழக்கூடியதாகும்.

கற்றாழையில் சோற்றுக் கற்றாழை, சிறு கற்றாழை, பெரும் கற்றாழை, பேய்க் கற்றாழை, கருங் கற்றாழை, செங் கற்றாழை, இரயில் கற்றாழையெனப் பல வகை உண்டு. இதில் சோற்றுக் கற்றாழை மருத்துவ குணங்களுக்கென்று பயன்படுத்தப்பட்டு வருகிறது. இலைச்சாறுகளில் amino acids, anthraquinones, enzymes, minerals, vitamins, lignins, monosaccharide, polysaccharides, salicylic acid, saponins, and sterols எனும் பல வேதிப்பொருட்கள் உள்ளன. கற்றாழையிலிருந்து வடிக்கப் படும் மஞ்சள் நிற திரவம் மூசாம்பரம் எனப்படுகிறது. தளிர்பச்சை, இளம்பச்சை கரும்பச்சையெனப் பலவிதமாக உள்ள சோற்றுக் கற்றாழையில் முதிர்ந்தவற்றில்தான் மருத்துவத்தன்மை மிகுந்து காணப்படு கின்றது.

கற்றாழை வறட்சியான பகுதிகளில் வளர்ப்பதற்கு ஏற்ற ஒரு மருந்துச் செடி ஆகும்.



பல்வேறு அழகுச் சாதனங்கள் மருந்துப் பொருட்கள் தயாரிப்பதற்கு கற்றாழை பெரிதும் பயன்படுகின்றது. கற்றாழை இலையிலிருந்து எடுக்கப்படும் "ஜெல்" எனப்படும் "கூழ்" சருமத்தின் ஈரத்தன்மையை (Moisture) பாதுகாக்கப் பயன்படுகிறது. இதன் தேவைக்கு இயற்கை சூழ்நிலையிலிருந்து கற்றாழைச் செடிகள் சேகரிக்கப்பட்டு பக்குவப்படுத்தியபின் மருந்துப் பொருட் களில் பயன்படுத்தப்படுகின்றது. இருப்பினும், தரம் வாய்ந்த கற்றாழைக்கூழ் எடுப்பதற்குத் தென்னாப்பிரிக்கா, மேற்கு இந்தியத் தீவுகள், குர்குவா தீவுகள், இந்தியா ஆகிய நாடுகளில் வணிக ரீதியாகப் பயிர் செய்யப்படுகிறது.

கற்றாழையின் மருந்து மகத்துவத்தை கி.பி. 17ஆம் நூற்றாண்டிலேயே ஆப்பிரிக்கர்கள் கண்டறிந்து உலகத்துக்கு அறியப்படுத்தினர். கற்றாழையின் இலையில் அலோயின், அலோசோன் போன்ற வேதிப்பொருட்கள் உள்ளன. அலோயின் வேதிப்பொருளின் அளவு நான்கிலிருந்து இருபத்து ஐந்து வீதம் வரை கற்றாழை இலையில் காணப்படுகிறது.

சித்தா மற்றும் ஆயுர்வேத மருத்துவத்தில் கற்றாழைச்சாறு, இருமல், சளி, குடல்புண் ஆகியவற்றிற்கு மருந்தாகப் பயன்படுகின்றது. கடும் வயிற்றுப்புண், தோலில் ஏற்படும் தீக்காயம், அரிப்பு வெட்டுக்காயங்கள் ஆகியவற்றிற்கும் மருந்தாகப் பயன்படு கின்றது.

கற்றாழையின் இலையிலிருந்து எடுக்கப் படும் கூழ் சருமத்திற்கு பாதுகாப்பாகக் கருதப் படுகிறது. சூரிய ஒளியுடன் கலந்து வரும் கடும் வெப்பத்தை ஏற்படுத்தும் காமா (Gamma) மற்றும் எக்ஸ்ரே கதிர் வீச்சுகளின் தீய விளைவுகளிலிருந்து சருமத்தை பாதுகாக் கின்றது. மேலும் சருமத்தின் ஈரத்தன்மை யைக் காத்து சருமத்தின் நிறத்தையும் மேம்படுத்துகிறது. இதனால் வணிக முறையாக அதன் கூழ் உலகெங்கிலும் சருமப் பராமரிப்பு, சவரம் செய்வதற்கான கூழ்மங்கள், சம்பூ ஆகியவற்றில் சேர்க்கப்படுகின்றது. கற்றாழை மனிதர்களின் உடலுக்கு உட்புறத்திலும் வெளிப்புறத்திலும் பயன்படுத்தப்படுகிறது. இதில் சில மருந்துவ குணங்கள் இருக்கின்றன என்று கூறப்படுகிறது. இந்தக் கூற்று அறிவியல் சார்ந்த மற்றும் மருத்துவ ஆராய்ச்சிகளால் ஆதரிக்கப்படுகின்றது. இலைகளில் உள்ள கூழ் (Gel) கொண்டு ஒரு வழு வழுப்பான களிம்பு தயாரிக்கப்படுகிறது. இது வேனிற்கட்டி போன்ற எரிகாயங்களை குணமாக்குகிறது. இவற்றைக் கொண்டு சில சிறப்பு வாய்ந்த சவர்க்காரம் (soap) வகைகளும் தயாரிக்கப்படுகின்றன.

சில வகைகள், குறிப்பாகச் சோற்றுக் கற்றாழை மாற்று மருந்தாகவும், வீட்டு முதல் மருத்துவமாகவும் பயன்படுத்தப்படுகிறது. ஓரளவு தெளிவுள்ள உட்புற தாவரத்தின் கூழ்மமும், கற்றாழை தாவரத்தை நசிப்ப தினால் வெளியாகும் மஞ்சள் நிற அலோயின் பிசினும், தோல் சம்பந்தப்பட்ட சிக்கல்களை ஆற்றுவதற்காக உடலுக்கு வெளிப்புறமாகப் பயன்படுத்தப்படுகிறது. சமிபாட்டுக் கோளாறுகளை நீக்குவதற்காக, ஆலோ வேறா சாறு பொதுவாக மூலிகை மருந்தாக உட்கொள்ளப்படுகிறது.

இன்றைய சூழலில், சோற்றுக் கற்றாழை, மனிதர்களால் உட்கொள்ளப்படுகிறது மற்றும் வெளிப்புறமாகவும் பயன்படுத்தப் படுகிறது. இலைகளில் காணப்படும் கூழ்மம், சிறிய எரிகாயங்கள், காயங்கள் மற்றும் படைநோய், படர்தாமரை போன்ற பல தோல் குறைகளையும் ஆற்றுவதற்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. செடியிலிருந்து பிழிந்தெடுக்கப்பட்ட சாறு, பலவகையான சமிபாட்டுச் சிக்கல்களுக்குச் சிகிச்சை அளிப் பதற்காக உட்கொள்ளப்படுகிறது. 1950களில் பல மேற்கத்திய நாடுகளில் இந்த வகை மூலிகைமருத்துவப்பயன்பாடு பிரபலமானது. கூழ்மத்தின் தாக்கம் உடனே நிகழும். இது காயங்களின் மேலே ஒரு மெல்லிய தோல் போன்ற படலத்தை ஏற்படுத்தி, நோய்த் தொற்றுகள் ஏற்படும் வாய்ப்பைக் குறைக் கிறது என்று கூறப்படுகிறது.

– நிலா. கோ.துரைரத்தினம்



மேற்றர் புதுக் காதலனுக்கு தெரியும்!

சமந்தாவின் காதல் விவகாரம் பற்றி வாரம் ஒரு செய்தி வெளியாகிக் கொண்டிருக்கிறது. சமந்தாவும், நாகசைதன்யாவும் எப்படி சந்தித்தார்கள், எப்படி காதலை பரிமாறினார்கள் என்று ஆரம்பித்த செய்தி, இப்பொழுது வந்து நிற்பது விபரீதமான ஒரு இடத்தில். ஆம். சமந்தாவின் கடந்தகால காலம்ஞ் வெளிப்படையாக சொன்னால், சித்தார்த்தை காதலித்த விவகாரமெல்லாம் நாகசைதன்யாவிற்கு தெரியுமா என்பதுதான் அந்த வில்லங்க விவகாரம். தனக்கு நெருங்கியவர்களிற்கு சமந்தா இந்த சந்தேகத்தை தீர்த்து வைத்துள்ளாராம். சித்தார்த்துடனான காதல், முறிவு எல்லாம் அக்குவேறு ஆணிவேறாக நாகசைதன்யாவிற்கு தெரியுமாம். சமந்தாவிற்கு தேறுதல் சொன்னவர்களில் சைதன்யாவும் ஒருவராம். தேறுதல் சொல்லி, நண்பராகி, சில வருடம் நட்பை பேணித்தான் காதலை பரிமாறினோம். என் கடந்த காலம் முழுவதும் நாகசைதன்யாவிற்கு தெரியும் என்றுள்ளார்.

தேறி வந்த காதலாக இருக்குமோ!

4ஜி ஜி.வி!

ஷங்கரின் உதவியாளர் வெங்கட் பாக்கர் இயக்கும் படம் 4ஜி. ஜி.வி.பிரகாஷ்குமார் ஹீரோவாக நடிக்கிறார். கடந்த வாரம் சென்னையில் படப்பிடிப்பு தொடங்கியது. ரேவதியின் முன்னாள் கணவர் சுரேஷ் மேனன் ஒளிப்பதிவாளர். அனைவரும் ரசிக்கும்விதமான காதல் கதையாக இருக்குமென்கிறார்கள். அடுத்த வருடம் காதலர் தினத்தன்று படம் வெளியாகுமாம்.

4ஜி வேகத்தில் தியேட்டரிலிருந்து ஓடாவிட்டால் சரி!



ஸ்ரேயாவின் காதல்!

ஸ்ரேயாவை அவ்வளவு விரைவில் ரசிகர்கள் மறந்திருக்க மாட்டார்கள். தமிழ், தெலுங்கில் முன்னணியிலிருந்தவர். தமிழின் அனேக முன்னணி நாயகர்களுடன் நடித்து விட்டார். இப்போது அவருக்கு 34 வயதாகிறது. இளவயது நடிகைகளின் வரவால் வாய்ப்பிழந்து விட்டார். வீட்டில் உட்கார்ந்திருப்பவருக்கு கல்யாணம் காட்சி செய்து பார்க்கும் முயற்சியில் பெற்றோர் ஈடுபட்டுள்ளனர். பெற்றோரை சிரமப்படுத்தாமல் ஸ்ரேயாவே மாப்பிள்ளை பார்த்துவிட்டார் என்பதுதான் இப்போதைய பரபரப்பு. மாப்பிள்ளை மேற்கிந்தியதீவுகள் அணியின் வெய்ன் பிராவோ. இருவரும் ஒன்றாகத்தான் சுற்றி திரிகிறார்களாம். அண்மையில் மும்பை ஹோட்டலின் முன்பாக இருவரையும் ஒருவர் படம்பிடித்து வெளியிட, காதல் பகிரங்கமாகியுள்ளது.

கறுத்த மாப்பிள்ளையை சிவப்பாக்க பெயர் அண்ட் லவ்லியா பாவிப்பார்?

அலப்பறை அரவிந்த்சாமி!

ஒரு காலத்தில் அரவிந்த்சாமி ஓகோ வென இருந்தார். அலைபாயுதே படத்தில் கெஸ்ட் ரோலில் நடித்த பின்னர் நடிப்பை விட்டு ஒதுங்கிவிட்டார். பின்னர் நீண்ட இடைவெளியின் பின்னர் கடல் படத்தில் நடித்தார். படம் சொல்லிக்கொள்ளும் விதமாக அமையவில்லை. ஆனால் அரவிந்த்சாமிக்கு வாய்ப்புக்கள் வந்தன. தனிஒருவனில் வில்லனென்றாலும், அவரது ஸ்டைலான நடிப்பு பேசப்பட்டது. இப்போது போகன் படத்திலும் ஜெயம் ரவியுடன் நடிக்கிறார். தனி ஒருவனின் தெலுங்கு ரீமேக் துருவா. இதன் படப்பிடிப்பு நடக்கிறது. ஆனால் படப்பிடிப்பிற்கு சரியான நேரத்தில் செல்வதில்லை, இயக்குனர் சொல்வதை போல நடிக்காமல் தனது விருப்பத்தில் நடிக்கிறார் என நிறைய குற்றச்சாட்டுக்கள் வருகின்றன. இதனால் தெலுங்கில் அவரை ஒப்பந்தம் செல்ல பலர் தயங்குகிறார்களாம்.

தனி ஒருவனை தப்பாக விளங்கிவிட்டாரோ!

நான் பானுஜன் அல்ல; மோனிஷா!

ஒரு திருநங்கையின் வாழ்வியல் தொடர் 7



வடக்கு கிழக்கில் யாழ்ப்பாணத்தில்தான் திருநங்கைகள் ஓரளவு வெளிப்படையாக செயற்படுகிறார்கள். முழுமையான அமைப்பாக அல்லாவிட்டாலும் ஓரிரண்டு அமைப்புக்கள் திருநங்கைகள் சார்ந்து யாழில் இயங்குகின்றன. திருநங்கைகளை முழுமையாக ஒருங்கிணைக்க, கல்வி தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்த முடியாவிட்டாலும் திருநங்கைகளை ஒன்றுதிரட்ட, சமூகத்தில் சிறிய அசைவை ஏற்படுத்த அவற்றால் முடிந்திருக்கிறது.

கிளிநொச்சியில், மன்னாரில், வவுனியாவில், கிழக்கில் திருநங்கைகள் பகிரங்கமாக அடையாளத்தை வெளிப்படுத்த தயங்கும் நிலைமையே உள்ளது. இந்த பகுதிகளிலுள்ள திருநங்கைகள் சிலர் யாழ்ப்பாணத்திற்கு வருகிறார்கள். இங்குள்ள திருநங்கைகளுடன் இணைந்திருக்கிறார்கள்.

திருநங்கைகள் எதிர்கொள்ளும் பெரிய சவால் வேலை வாய்ப்பு. திருநங்கை அடையாளத்தை வெளிப்படுத்திய நாளில் இருந்து அவர்கள் பாடசாலைக்கு செல்ல முடியாத நிலைமை. நான் பாடசாலையில் நீடிக்க முடியாததை போன்ற நிலைமைதான் ஒவ்வொரு திருநங்கைக்கும்.

போதிய புரிதல் இல்லாத சமூகம், ஆசிரியர்கள், கேலி பேசும் மாணவர்கள் என திருநங்கைகள் எதிர்கொள்ளவே முடியாத சவால் பாடசாலை.

கல்வியை நிறுத்தியவர்களிற்கு தொழில் வாய்ப்புக்கள் கிடைப்பதில்லை.

வீட்டில் அங்கீகாரம் கிடைப்பதில்லை. உதவிகளும் கிடைக்காது. திருநங்கை அடையாளத்தை பிள்ளை சுமந்த கோபத்தில் பெற்றோரும் எதிர்நிலையில் இருந்திருப்பார்கள். பின்னர் புரிதல் கிடைத்து, பிள்ளையை ஏதாவதொரு தொழில்கல்விக்கு தயார்படுத்த முயற்சிக்கும் போதுதான் சிக்கல் ஆரம்பிக்கிறது.

திருநங்கைகளிற்கு தமிழர்களின் உயர் கல்வி, தொழில்கல்வி நிலையங்கள் எதுவும் திறக்கப்படவில்லை. பெண், ஆண் அடையாளத்துடன்தான் அங்கு செல்ல முடியும். திருநங்கைகள் எங்கு உட்கார்வதென பதில் கேள்வி கேட்பார்கள்.

உழைப்பு என்பதற்காக எல்லாவித வாய்ப்பையும் சமூகம் திருநங்கைகளிடமிருந்து பறிக்கிறது. எந்த வாய்ப்பையும் வழங்காமல், பிறரில் தங்கியிருக்கும் அடையாளம் அற்றவர்களாக திருநங்கைகள் இருக்க வேண்டுமென சமூகஅமைப்பு விரும்புகிறது. அவர்களை போகப்பொருளாகவும் பாவனை செய்கிறது. அதனால்த்தான் திருநங்கைகளை பெரும்பாலான ஆண்கள் பாலியல் சீண்டலிற்கு உள்ளாக்குகிறார்கள்.

கல்வியை முழுமையான நிறைவு செய்தாத நான் தொழில் பிரச்சனையை இப்பொழுது எதிர்கொள்கிறேன். ஒருமுறை கச்சேரியடியில் உள்ள விடுதி ஒன்றில் வேலைக்கு போனேன். துப்பரவு பணி எனக்கு கிடைத்தது.

இரண்டு வாரங்கள் சாதாரணமாக கடந்தது. ஒருநாள் விருந்தினர் தங்கியிருக்கும் அறைகளை சுத்தம் செய்ய சென்றேன். அறையொன்றில் தங்கியிருந்து விருந்தினன் ஒருவன் என்னை அழைத்து ஆபாசமாக பேசி, உறவிற்கு அழைத்தான்.

சாதாரணமாக ஒரு பெண்ணை யாரும் இப்படி அணுகுவதில்லை. பெண்கள் சமூகத்தில் சந்திக்கும் நெருக்கடிகள் அதிகமென்றாலும், இப்படியான பகிரங்க சீண்டல்கள் கிடையாது. திருநங்கைகள் என்றால் எப்படியும் நடக்கலாம், அவர்கள் குரலற்றவர்கள் என்றுதான் பெரும்பாலானவர்கள் நினைக்கிறார்கள்.

பிறகொருநாள் விடுதியில் தங்கியிருந்த சிங்கள பயணியொருவர் தன்னுடன் உறவிற்கு வருமாறு சிறிய துண்டில் எழுதி இன்னொருவர் மூலம் கொடுத்தனுப்பியிருந்தார். அந்த துண்டை கொண்டு வந்தவர்தான் எழுதுவதில் உதவியிருக்கலாம்.

இந்த விவகாரத்தை முதலாளி, என் வீட்டில் சொல்ல முடியாது. சொன்னால், நீ இப்பிடி திரிஞ்சால் கண்டவனும் சேட்டை விடுவான்தானே என இலகுவாக கடந்து செல்வார்கள்.

இப்படியான நெருக்கடிகளால் அந்த வேலையை தொடர முடியவில்லை. பின்னர் புடைவைக்கடை ஒன்றில் வேலைக்கு சேர்ந்தேன். நிறையப்பையன்கள் கடைக்கு முன்பாககூடத்தொடங்கினார்கள். 'அலியை பார்க்கப் போறம்' என கூச்சலிடுவார்கள். கடையில் வேலை செய்த மற்றைய பெண்கள் முகம் சுளிக்க தொடங்க, முதலாளி என்னை வேலையிலிருந்து நிறுத்தினார்.

திருநங்கைகளின் எதிர்காலம் எப்படியிருக்கும், பத்து வருடத்தின் பின் என் வாழ்க்கை எப்படியிருக்கும் என்றெல்லாம் எனக்கு தெரியவில்லை. எனக்கு ஆறுதலாக உள்ள வெகுசிலரும் பத்துவருடத்தின் பின் உயிருடன் இருப்பார்களா தெரியவில்லை. அவர்கள் இல்லாத உலகத்தை நினைக்கவே நடுக்கமாக இருக்கிறது. எப்படியோ திருநங்கைகளின் உலகம் இறக்கும்வரை போராட்டம்தான்.

கடந்த ஆறு இதழ்களில் திருநங்கைகளின் உலகம் பற்றிய எனது சிறு அனுபவங்களை எழுதியுள்ளேன். திருநங்கைகள் எதிர்கொள்ளும் மிகப்பெரிய சவால்களை இந்தவகையான எழுத்துக்கள் முற்றாக நிறுத்துமென நான் கற்பனை செய்யவில்லை. ஆனால், சிறிய விழிப்புணர்வையாவது உண்டாக்கியிருக்குமென நம்புகிறேன்.

அப்படியேதும் நிகழ்ந்திருந்தால் அந்த மகிழ்ச்சியை நான் மட்டுமே உரித்தாக்கி கொள்வது முறையல்ல. தீபம் பத்திரிகைதான் இந்த வாய்ப்பை உருவாக்கி தந்தது. அது இல்லாவிட்டால் இப்படியொரு வாய்ப்பே கிடைத்திருக்காது. அடுத்ததாக, என்கதையை எழுதுவதில் ஒத்தாசையாக இருந்த தீபத்தின் பிரியந்தினி, சியா ஆகியோருக்கும் நன்றியுடையவனாக இருப்பேன்.

இந்த உலகம் பெரியதுதான். அதில் ஏராளம் ஜன்னல்களும், கதவுகளும் இருக்கலாம். ஆனால், சாவிகள்தான் எமக்கு கிடைக்கவில்லை.

(முற்றும்)

– மோனிஷா

7-ம் பக்க தொடர்ச்சி

இல்லாத விட்டுக்கொடுப்புக்குத் தயார்." எனத்தெரிவித்திருந்தார் ரவூப் ஹக்கீம்.

இதற்குமாறாக, கிழக்கில் நடைபெற்று வரும் முஸ்லிம்களின் வடக்குகிழக்கு இணைப்பிற்குஎதிரான பிரச்சாரம் குறித்து, தமிழ் தேசியக் கூட்டமைப்பு மௌனம் சாதித்து வருவதுதொடர்பில் கிழக்குத் தமிழர்கள் அதிருப்பியை வெளிப்பிடுத்தியிருக்கிறார்கள்.

இலங்கை அரசாங்கத் தரப்பும் பேரினவாத சக்திகளும், வடக்கு இணைப்பு மற்றும் சமஷ்டிமுறை சாத்தியமற்றது எனக் கூறிவரும் நிலையில், அதற்குச் சாதகமானதொரு நிலையில் 'முஸ்லிம்களின்' இந்தப்பிரச்சாரம் அமைந்திருக்கிறது என்றே தமிழர்களால் கருதப்படுகிறது. இந்தப் பிரச்சாரம், சிங்களத்தரப்பினரின் தூண்டுதலிலேயே மேற்கொள்ளப்பட்டு வருகிறது,சிங்களத் தரப்பினரின் வாதத்திற்கு ஆதராக அமைகிறது என்ற சந்தேகம் கிழக்குத் தமிழர்கள் மத்தியில் நிலவுகிறது.

அண்மையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்வைத்திருக்கிற கருத்து இந்தச்சந்தேகத்தை வலுப்படுத்தியுமுள்ளது. மகிந்த ராஜபக்ஷ, முஸ்லிம்கள் வடக்கு கிழக்குஇணைப்பை எதிர்ப்பதால் தானும் வடக்குகிழக்கு இணைப்பை எதிர்ப்பதாக அண்மையில்தெரிவித்திருந்தார்.

எனினும், முஸ்லிம் காங்கிரசும் தமிழ் தேசியக் கூட்டமைப்புத் தலைமையும் (கூட்டமைப்புத்தலைமை என்பது தற்போது அது சம்பந்தரையும் சுமந்திரன் ஆகிய இருவரையுமே குறித்துநிற்கிறது) தாங்கள் நல்லிணக்கத்துடன் இருந்து வருவதாகக் கூறிவருகிறார்கள். எம்.ஏ.சுமந்திரன், நிபந்தனையற்ற இணைப்புக்கு எந்தவொரு முஸ்லிம் தரப்பும் முன்வரமாட்டாது. அப்படியானால் அந்த நிபந்தனை என்ன? அவற்றை எவ்வாறு நாங்கள் உள்வாங்குவது? என்பது தொடர்பிலும் தற்பொழுது பேச்சுக்கள் இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றன எனத்தெரிவித்திருக்கிறார்.

தமிழ்முஸ்லிம் மக்கள் மத்தியிலான உறவாடல்களும், உரையாடல்களும் மிக அவசியம் என நல்லாட்சிக்கான மக்கள் முன்னணி தெரிவித்திருக்கிறது அக்கட்சி, இது தொடர்பான அடுத்தகட்ட நடவடிக்கையாக நேரடி மக்கள் சந்திப்புக்களை ஏற்படுத்த தயார் எனவும், அவற்றில்கலந்து கொள்ளுமாறு சம்பந்தருக்கு அழைப்பும் விடுத்திருக்கிறது.

எனினும்,மிக அண்மையில் கிழக்கிலிருந்து வெளியாகி வரும் செய்திகள், உறவாடல்கள் உரையடால்கள் ஏற்பட முடியாதளவிற்கு தமிழ்முஸ்லிம் முரண்பாடுகள் மேலும் அதிகரித்துச் செல்கின்றதனையே காட்டிநிற்கின்றன.

வடக்கிலிருந்து முஸ்லீம்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டு 26 ஆண்டுகள் கடந்து விட்ட நிலையில், வடக்கு மாகாண சபையோ, இலங்கையின் எதிர்க்கட்சித் தலைமையிலிருக்கும் தமிழர் தேசியக் கூட்டமைபோ இன்றுவரை அவர்களது மீழ் குடியேற்றம் தொடர்பாக முஸ்லிம்களால் வைக்கப்பட்ட எந்தக் கோரிக்கைகளுக்கும், சாதகமான விதத்தில் எந்த முயற்சிகளும் எடுக்கவில்லை என்று தொடர்ந்து யாழ் மாநகரசபையின் முன்னாள் உறுப்பினர் சுபியான் குற்றம் சாட்டிவருவது தெரிந்ததே.

இந்தக் கொதிநிலையை தணிப்பதில், முக்கிய பங்கும் பொறுப்பும் யாழ் மாகாண சபைக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கும் இருக்கிறது, கிழக்குவாழ் தமிழ் மக்களுக்கும் கிழக்கு முஸ்லிம்களுக்கும் இடையில் நல்லுறவை ஏர்படுத்துவதில் இவர்களது பங்கு முக்கியமானது என்று அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.



கனடா மூர்த்தி எழுதும்

நினைத்துப் பார்க்கிறேன்

பற்றிக் கொண்டது நெருப்புடா...

சாம்சூங் என ஆரம்பித்து சங்கம் வரை போகலாம்...

ஒழுங்காக இயங்கினால் எல்லாமே நன்றாகத்தான் போய்க்கொண்டிருக்கும். ஆனால் நாம் நினைப்பதுபோலத்தான் உலகில் எல்லாம் நடந்துவிடுவதில்லையே! நாம் ஒன்று நினைத்துக் கொண்டிருக்க திடீரென நாம் நினைக்காத ஏதோ ஒன்று திடீரென வெடிக்கும்!! எல்லாமே தலைகீழாக மாறிவிடும். இதுதான் இயற்கை.

சம்சூங் போன்களைத் தயாரிக்கும் சம்சூங் நிறுவனத்திற்கும் இதுதான் நடந்துவிட்டது. யாருமே எதிர்;பாராத விதமாக அவர்களது நோட் 7 கைத்தொலைபேசி மின்கலத்தில் ஏற்பட்டுள்ள கோளாற்றின் காரணமாக மின்கலங்கள் மத்தாப்புப்போல சீறி எரிந்து பாவனையாளர்களைத் திகிலடைய வைத்துவிட்டன. மிரண்டுபோன விற்பனை யாளர்கள் சம்சூங் நோட் 7 கைத்தொலைபேசி விற்பனையை உடனடியாக நிறுத்தி விட்டனர். வாங்கப்பட்ட அனைத்து நோட் 7 கைத்தொலைபேசிகளையும் திருப்பித் தருமாறு சம்சூங் நிறுவனம் வாங்கியவர் களிடம் கோரிக்கை விடுக்கிறது. இவ்வாறு, சுமார் 2.5 மில்லியன் கைத்தொலைபேசிகளை சம்சூங் திருப்பி எடுக்க முனைந்துள்ளதாக பிபிசி தெரிவிக்கிறது. அதுமட்டுமல்லாமல் நோட் 7 கைத் தொலைபேசியின் தயாரிப் பையும் விற்பனையையும் சம்சூங் நிறுத்திக் கொண்டும்விட்டது. இன்னொரு பின்னடை வாக உலகின் பல விமான நிறுவனங்கள் சம்சூங் கைத்தொலைபேசியுடன் விமானத் தில் பயணிப்பதையும், கைத்தொலைபேசிக்கு மின்னேற்றம் செய்வதையும் தடுத்துவிட்டன. சம்சூங் கைத்தொலைபேசிகளின் நம்பகம் குறித்த சந்தேகம் துரதிஸ்டவசமாகப் பாவனையாளர்களிடம் ஏற்பட்டுவிட்டது என்பதையும் மறுப்பதற்கில்லை.

தொழில்நுட்பம் விரைந்து விரிந்து வரும்போது இத்தகைய பிரச்சனைகள் நடக்கக்கூடியவையே என்றாலும், சம்சூங் கிற்கு இது ஒரு பலத்த அடிதான்... பங்கு விலைகளைச் சரிப்படுத்த அடுத்து என்ன தான் செய்வது என்று சம்சூங் இப்போது குழம்பி நிற்கிறது. அப்பிள் கைத்தொலை பேசித் தயாரிப்பாளர்களான அப்பிள் நிறுவனம்தான் இதனால் பெரு மகிழ்ச்சி யடைகிறது என்று ஒருபகுதியினர் சொல்கி றார்கள். சம்சூங் இதிலிருந்து மீண்டு விடும் என்றும் இன்னொரு பகுதி அடித்துச் சொல்கிறது.

நினைத்துப் பார்க்கிறேன் எல்லாவகைக் கைத்தொலைபேசிகளிலும் இதுபோன்ற பிரச்சினைகள் வரலாம்தான். இது கைத்தொலைபேசிகளுக்கு மட்டுமல்ல. மற்றவகை மின்னணு உபகரணங்களுக்கும் நன்கு பொருந்தும். வாங்கப்படும் அந்தப் பொருளில் ஏதோ சிக்கல் வரக்கூடும் என்பதை உணர்ந்து நிறுவனங்கள் அதற்கு வாரென்டியோ காரன்டியோ தந்து வாடிக்கையாளர்களை சமாதானப்படுத்து கிறார்கள். பாதிப்புக்கான இன்சூரன்ஸ் மட்டும் நாங்கள் வாங்கவேண்டும்.

என் நண்பர் ஒருவர் சீனத் தயாரிப் பான கைத்தொலைபேசி ஒன்றை வாங்கியிருந்தாராம். பேசிக் கொண்டிருக்கும் போது அந்த கைத்தொலைபேசியின் மின்கலமும் சூடாகி போனது என்றார். பிறகு "காதல் எங்கே பிறந்திருக்க வேண்டும் தெரியுமா?" என்று கேட்டார். "தெரியாது" என்று சொல்லி நெளிந்தேன். "சீனாவில்தான் காதல் பிறந்திருக்கவேண்டும்" என்று அடித்துச் சொன்னார் அவர். "அது எப்டீ?" என்று கேட்டேன். "Anything made in China is NO GURANTEE & NO WARRANTY" என்றுவிட்டார். அடப்பாவி... வாரென்டியோ காரன்டியோ இல்லாமல் காதலும் இல்லாமல் கைத்தொலைபேசியும் இல்லாமல் எப்படி வாழ்வது என்று நான் குழம்பி...

நினைத்துப் பார்க்கிறேன்... இன்றுபோல தொழில்நுட்பம் இல்லாத காலத்தில் நம்ம தமிழர்கள் எப்படி வாழ்ந்திருப்பார்கள்..??? நினைத்தாலே சுவாரஸ்யமாக இருக்கிறது. 'தகவல் பரிமாற்றம்', 'தகவல்தொழில் நுட்பம்' இல்லாத காலத்திலும் தகவல்கள் பரிமாறப் பட்டுக் கொண்டுதான் இருந்திருக்கின்றன. இம்சை அரசன் புலிகேசி படம் உட்பட பல சரித்திரப் படங்களில் புறாவில் கடிதத்தை அனுப்புவதாக தமிழ் சினிமா காட்டியிருக்கிறது. இலங்கையில் எட்டாம் வகுப்புத் 'தமிழ் மலரில்' படித்த 'நளவெண்பா' நினைப்பிற்கு வருகிறது. தமயந்தி தன் காதலனான நளனுக்கு அன்னப்பறவையை தூது செல்ல அனுப்பிய நளவெண்பாக் கதையெல்லாம் தகவல் பரிமாற்றம் குறித்த விளக்கங்களே.

இவ்வடிப்படையில்தான் தமிழ்ச் சிற்றிலக்கிய வரலாற்றில் பல தூது இலக்கி யங்கள் தோற்றம் பெற்றுள்ளன. 'அகத்தூது', 'புறத்தூது' என தூது இரு வகைப்படும். 'அகத்தூது', தலைவி தன் அன்பின் மிகுதியை அஃறிணைப் பொருள்களிடம் கூறித் தன்னி லையைத் தலைவனிடம் கூறுமாறு வேண்டு வதாக அமையும். தூது வகையுள் 'தமிழ்விடு தூது' சிறப்பானதாக மதிக்கப்படுகிறது. ஆசிரியர் தன்னைத் தலைவியாகவும், சிவபெருமானைத் தலைவனாகவும் கொண்டு தமிழ்மொழியைத் தூதுவிடுவதாக இவ்விலக்கியம் அமைகிறது. இத் 'தமிழ் விடுதூது' வாயிலாகத் தமிழ் இலக்கியத்தின் சிறப்புகள் எடுத்துரைக்கப்படுகின்றன.


இன்றைய தூது இலக்கியங்களுக்கெல்லாம் முன்மாதிரியாக 'காமம் மிக்க கழிபடர் கிளவி' அமைகிறது. சங்க காலத்தில் காமம் என்ற சொல்லுக்கு அன்பு என்பதே பொருளாக இருந்தது. கமம் என்ற சொல்லிருந்து தான் காமம் என்ற சொல் உருவானது. கமம் என்றால் நிறைவு என்பது பொருளாகும். அன்பின் நிறைவையே காமம் என்று பழந்தமிழர்கள் அழைத்தனர்.

காமம் மிக்க கழிபடர்கிளவி' என்னும் அகத்துறையை சங்க இலக்கியத்தில் வரும் நற்றிணைப் பாடல் ஒன்று மிகஅழகாக விளக்குகிறது. ஹிரோயினைச் சந்தித்து மகிழ்ந்த ஹீரோ, ஏதோ சில காரணங்களால் அவளைச் சந்திக்க வரவில்லை. ஹீரோயினை பிரிவு வாட்டுகிறது. காதலனை காண வேண்டும் என்ற ஆசை பற்றிக் கொள்கிறது. காதல் என்பதே நெருப்புடா.. என்பதை கூறாமல்கூற ஒரு நாரையை நோக்கித் தன்னிலை கூறி அதனை ஹீரோவிடம் சென்று கூறுமாறு வேண்டுகிறாள்.

'சின்ன வெள்ளை நாரையே... தோய்ச்ச உடுப்புப்போல நல்ல நிறமாயிருக்கிற வெள்ளைக்கலர் நாரையே.. நீ அவற்ரை ஊரில இருந்து எங்கட ஊருக்கு வாறாய்.. இஞ்சையிருக்கிற குளம், குட்டையில மீன் தின்னுறாய்.. பிறகு ஊருக்கு போயிடுறாய்... ஒவ்வொரு நாளும் என்ரை நிலையை பாக்கிறாய்தானே... அவற்ரை பிரிவால நான் கையிலை போட்டிருக்கிறமோதிரம்காப்புகள் கூட கழண்டு விழுகுது... என்ரை கவலையை அவரிட்டை சொல்லமாட்டியே..? என்ரை ஊரில மீன் திண்ட நீ இந்த நன்றியை மறந்திடதாதை...' என்று யாழ்ப்பாணத் தமிழில ஹீரோயின் சொல்வதை சங்க காலத்தில் தமிழில் இப்படி எழுதி யிருக்கிறார்கள்:

சிறு வெள்ளாங்குருகே சிறு வெள்ளாங் குருகே
துறை போகு அறுவைத் தூ மடி அன்ன
நிறம் கிளர் தூவிச் சிறு வெள்ளாங்குருகே
எம் ஊர் வந்து எம் உண்துறைத் துழைஇ
சினைக் கெளிற்று ஆர்கையை அவர் ஊர்ப் பெயர்தி
அனைய அன்பினையோ பெரு மறவியையோ
ஆங்கண் தீம் புனல் ஈங்கண் பரக்கும்
கழனி நல் ஊர் மகிழ்நர்க்கு என்
இழை நெகிழ் பருவரல் செப்பாதோயே

(ஏதாவது புரிகிறதா?)





சென்ற இதழில் வெளியான இத் தொகுப்புக்கு எழுதியிருந்த அறிமுகக் குறிப்பில் தவிர்க்க முடியாத விதத்தில் பல எழுத்துத் தவறுகள் ஏற்பட்டுவிட்டன. வாசகர்களிடம் இந்தத் தவறுக்கு வருத்தம் தெரிவிப்பதுடன், அந்தக் குறிப்பின் திருத்திய வடிவத்தை கீழே தருகிறோம். வாசகர்கள் தொகுப்பின் இரண்டாம் பகுதியை தொடர்ந்து கீழே படிக்கலாம்.


காவிரி நீர்ப் பிரச்சினை தமிழகத்திற்கும் கர்நாடகாவுக்கும் இடையிலான பிரச்சினையாக உருவெடுத்து பெரும் கலவரங்களைத் தோற்றுவித்திருந்தது. தமிழகத்திலிருந்து கர்நாடா வழியாகப் பயணிக்கும் அப்பாவி தமிழ் வாகன ஓட்டுனர்கள் மற்றும் பயணிகள் மோசமாக, கேள்வி முறையற்ற விதத்தில் தாக்கப்பட்டிருந்தனர். முதலமைச்சர் ஜெயலலிதாவின் சுகயீனம் காரணமாக தமிழகத்து நாளேடுகளில் பெருமளவுக்கு அந்த விடயமே பிரதான செய்தியாகிவிட்ட நிலையில் காவிரி நீர்ப் பிரச்சினை சற்று பின்னுக்குத் தள்ளப்பட்டுவிட்ட போதும் அதன் முக்கியத்துவம் குறைந்துவிடவில்லை. இந்தச் சிக்கல் இன்று நேற்றல்ல கிட்டத் தட்ட ஒரு நூற்றாண்டு காலப் பிரச்சினை. இந்த விடயத்தில், இன்று நடந்து கொண்டிருப்பது என்ன, இதில் எங்கே தவறிருக்கிறது, நீர்ப்பங்கீட்டில் நிலவும் சிக்கல்களுக்குக் காரணம் என்ன என்பதை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்வதற்கான முயற்சியின் ஒரு விளைவே இந்தக் கட்டுரையின் தொகுப்பாகும். விடயத்தின் முக்கியத்துவமும், வரலாற்றின் நீளமும் காரணமாக இந்தத் தொகுப்பு சற்று நீளமாக இருப்பதால், இரண்டு மூன்று இதழ்களுக்குத் தொடரக் கூடும். முடிந்தளவில், சரியான, நியாயமான, பக்கச்சார்பற்ற நிலையில் நிலமைகளை மதிப்பிட்டுள்ள கட்டுரைகளில் இருந்து இந்தத் தொகுப்பு தயாரிக்கப்பட்டுள்ளது. சென்ற இதழில் வெளிவந்த பகுதியின் தொடர்ச்சி கீழே:



தமிழகமும் காவிரி நீர்ப் பங்கீட்டுப் பிரச்சினையும்:

ஒரு வரலாற்று ரீதியான அவதானங்களின் தொகுப்பு 2

1971 இல் பிரதமரின் தலையீட்டால் மீண்டும் தாக்கல் செய்யும் உரிமையுடன், உச்ச நீதிமன்றத்தில் தான் தொடுத்த வழக்கை தமிழக அரசு திரும்பப் பெற்றுக் கொண்டதற்குப் பிறகு. 1983ல் தமிழ்நாடு காவிரி விவசாயிகள் நல உரிமை பாது காப்பு சங்கம், உச்சநீதி மன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்து நடுவர் மன்றம்



அமைக்கும்படி கேட்டது.

அதன் பிறகு தமிழக அரசு 1986ல் மத்திய அரசிடம் நடுவர் மன்றம் அமைக்கும்படி விண்ணப்பித்தது. இதன்பிறகு உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டுதலுடன் திரு. வி.பி. சிங்கின் மத்திய அரசு 02/06/90 ம் தேதி உத்தரவிட்டு காவிரி நடுவர் மன்றத்தை அமைத்தது. 1970 முதல் 1990 வரை தமிழக, கர்நாடக மந்திரிகள், முதல்வர்கள் போன்றோர் 21 முறை இப்பிரச்சனைக் குறித்து விவாதித்தும் எந்த முடிவும் எட்டப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் காவிரி நடுவர் மன்றமே கூட, அன்றைய நிலையில் காங்கிரஸ் பாரதியஜனதா போன்ற பெரிய கட்சிகள் அன்றி வி.பி.சிங்கை பிரதமராகக் கொண்ட தேசிய முன்னணியின் முயற்சியால் தமிழக கோரிக்கையின்படி அமைக்கப்பட்டதாகும். நடுவர் மன்றத்தீர்ப்பு 25/6/91 தேதியிட்ட இடைக்காலத் தீர்ப்பின் முக்கிய அம்சமாக தமிழகத்திலுள்ள மேட்டூர் அணைக்கு ஒவ்வொரு ஆண்டும் (ஜூன் மாதம் ஆரம்பித்து மே மாதத்தில் முடிவடையும்) 205 டி.எம்.சி. தண்ணீரை கர்நாடகா அனுப்ப வேண்டும் என்றும் (ஜூன் முதல் செப்டம்பர் வரை மட்டும் 137 டி.எம்.சி. தண்ணீர் அனுப்ப வேண்டும்) கர்நாடகா தனது பாசன பரப்பை 11.2 லட்சம் ஏக்கருக்கு மேல் விரிவு படுத்தக்கூடாது என்றும் குறிப்பிட்டு இறுதித் தீர்ப்பு வரும்வரை இந்த இடைக்காலத் தீர்ப்பே அமலில் இருந்திடும் என்றும் உத்தர விட்டது.

இதன்பிறகு 25.11.91ல் இடைக்காலத் தீர்ப்பை எதிர்த்து கர்நாடகா மேல் முறையீடு செய்ததன் விளைவாக 3.4.92ல் நடுவர் மன்றம் விளக்கத் தீர்ப்பு ஒன்றை அளித்தது. இதில் போதிய அளவு தண்ணிர் உற்பத்தியாகாத ஆண்டுகளில் ஏற்படும் பற்றாக்குறையை சம்மந்தப்பட்ட மாநிலங்கள் பகிர்ந்துக்கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தது.

கர்நாடகாவின் நயவஞ்சகம் இந்த விளக்கத் தீர்ப்பில் கூறப்பட்டுள்ள பற்றாக் குறை என்ற வார்த்தையை தனக்கு சாதக மாக பயன்படுத்திக் கொண்டு தமிழகத்திற்கு தண்ணீர் விடாமல் கர்நாடகா குழப்பி ஏமாற்றிக் கொண்டிருக்கிறது. கர்நாடக அணைகளில் நீர் நிரம்பி வழிந்தாலும் பற்றாக்குறை என்று கூறி வந்துக்கொண்டிருக்கிறது.1991ல் நடுவர் மன்றம் தீர்ப்பு வழங்கப்பட்ட காலக்கட்டத்தில் 11.2 லட்சம் ஏக்கர் அளவிற்கு இருந்த கர்நாடக பாசனப்பகுதி கொஞ்சம் கொஞ்சமாக அதிகரிக்கப்பட்டு தற்போது 25 இலட்சம் ஏக்கருக்கு மேலும் பாசனத்தை பெருக்கிக் கொண்டிருக்கிறது.

இது மட்டுமல்லாது கர்நாடகா அணைகளுக்கு கீழே உள்ள கர்நாடக பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏரிகளை ஆழப்படுத்தி அணைகளில் நிரம்பி வழியும் நீரையும் அதில் தேக்கி வைப்பதன் மூலம் தமிழகத்திற்கு நீர் கிடைக்காமல் செய்ய முயல்கிறது. தமிழகத்தின் உயிர்நாடியான தண்ணீர் பிரச்சனை இன்று அரசியல் ஆக்கப்பட்டது தான் வேதனை தரும் விஷயம்.

இடைக்காலத் தீர்ப்பு வந்தபோது கர்நாடகாவில் வாழும் தமிழர்களின் உயிருக்கும், உடமைக்கும் பாதிப்பு அதிகரித்தது மட்டுமல்லாமல், எப்போதெல்லாம் இப்பிரச்சனை வெடிக்கிறதோ அப்போதெல்லாம் கர்நாடகாவில் வாழும் தமிழர்கள் அச்சமுறும் வகையில் நிகழ்வுகள் அங்கு அரங்கேறுகின்றன. காவிரி: தமிழகத்திற்கு நேரிட்ட அரசியல் சிக்கல்கள்நடுவர் மன்றம் அமைப்பதற்கு முன்புவரை, அதுகாலம்வரை மத்தியில் ஆட்சி செய்துவந்த காங்கிரஸ் அரசு 'நடுவர்மன்றம்' என்பதையே அமைக்கவே முன்வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

1992ல் தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தில் தொடுத்த வழக்கின் விசாரணையில் 12/8/1998ல் உச்ச நீதி மன்றம் காவிரி நதிகள் ஆணையம் அமைக்க இறுதி வாய்ப்பு வழங்கிய நிலையில், உச்சநீதி மன்ற நெருக் கடியின் பேரில் அப்போதைய (1998) பாரதிய ஜனதா கூட்டணி அரசு உருவாக்கிய காவிரி ஆணையமோ, நடுவர் மன்றத் தீர்ப்பை செயல்படுத்த முறையான அமைப்பாக உருவாக்கப்படவில்லை. இதன் மூலம் உச்சநீதிமன்ற வழக்கும் முடிக்கப் பட்டது. இது முழுக்க முழுக்க கர்நாடகத் திற்கு சாதகமாகிவிட்டது. தமிழக முக்கிய அரசியல் கட்சிகள் (அ.தி.மு.க, தி.மு.க மற்றும் இதர தேர்தல் அரசியல் கட்சிகள்) இவ்விஷயத்தில் அதிகளவில் டெல்டா விவசாயிகளின் உணர்வுகளை புரிந்துக் கொண்டதாக தெரியவில்லை. பிரச்சினை தீர்த்து வைப்பதில் காட்டும் ஆர்வத்தைவிட இவர்களின் யார் மக்களின் காவலன் என்கிறவகையான அறிக்கை போர்களில் தான் அதிகம் அக்கறை காட்டுகின்றனர். அதுமட்டுமல்லாது மாற்றுப் பயிர் திட்டத்தை அறிமுகப்படுத்துவதாகக் கூறி காவிரியில் பன்னெடுங்காலமாக நமக்கு உள்ள உரிமையை மறைமுகமாக நீர்த்து போகச்செய்கின்றனர்.

இவர்கள் மட்டுமல்ல, தேசிய கட்சிகளான காங்கிரசும்பாரதிய ஜனதாவும்கர்நாடகத்தில் செல்வாக்குள்ள கட்சியாக விளங்குவதால் அவை கர்நாடகத்திற்கு எதிராக செயல்பட தயங்குகிறது. தேசியக்கட்சிகள் என்று கூறிக்கொள்ளும் இவர்களது தமிழ்நாடு பிரிவு தண்ணீர் கேட்டும், கர்நாடக பிரிவு தண்ணீர் தரக்கூடாது என்று கூறியும் மக்களை ஏமாற்றி வருகின்றனர். தற்போது கூட காவிரி நடுவர் மன்றத்தையே மாற்ற வேண்டும் என்று கர்நாடக அனைத்துக் கட்சி கூட்டம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.காவிரி நீரை மறுப்பதில் கன்னடர்களுக்கு உள்ள ஒற்றுமை அதை பெறுவதில் தமிழர்களுக்கும், தமிழக ஆட்சியளார்கள், அரசியலார்களுக்கு இல்லை. அதனாலேயே மத்திய அரசு இதில் அதிக அக்கறை காட்டுவதில்லை. இந்நிலை தொடர்ந்தால் தமிழ்நாடு பாலைவனமாக ஆவதை யாராலும் தடுக்க முடியாது. இதை உணர்ந்து தமிழக மக்கள் அரசியலுக்கு அப்பாற்பட்டு அமைப்பாகி காவிரியை மீட்க முயல்வதோடு தென்னக நதிநீர் இணைப்பை நிறைவேற்ற ஆட்சியாளர்களுக்கு நெருக்கடியை கொடுக்க வேண்டும். இந்த நெருக்கடியானது மத்தியரசுக்கு அச்சத்தை ஏற்படுத்துமேயானால் காவிரி தீர்விற்கு அதுவே அச்சாரமாக அமையும்.

(தொடரும்)

வாகன இறக்குமதி உத்தரவுப் பத்திர மோசடியில் தமிழ் எம்.பிக்கள் !

லஞ்சம், ஊழல் தொடர்பான குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழுவின் தலைவரான டில்றுக்ஷி விக்கிரமசிங்க அவர்களின் ஊழல் தொடர்பான முறைப்பாடொன்றை ஜனாதிபதியிடம் சமர்ப்பித்துள்ளார் சட்டத்தரணியும் லஞ்ச ஊழல் களுக்கெதிரான செயற்பாட்டாளாருமான் நாகானந்த கொடித்துவக்கு.

அந்த முறைப்பாட்டில்,ரொயொற்றா லாண்ட் குறூசர் வாகனத்தினை பாராளுமண்ற உறுப்பினர்களுக்கான வரிதீர்வை அற்ற இறக்குமதி வசதியின் கீழ் இறக்குமதி செய்ததுடன், அதற்குரிய வரிப்பணத்தைக் கூடக் கட்டாமல், பாரளுமன்ற உறுப்பினர்களுடைய பெயரில் வாகனம் பதிவுசெய்யப்பட்ட அன்றே அவற்றை மூன்றாம் நபர்களுக்கு மாற்றிக் கொடுத்ததற்கான போதிய ஆதாரத்துடன் தான் சமர்ப்பித்த குற்றச்சாட்டிற்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக கொடித்துவக்கு மேலும் தெரிவிக்கையில், ஆணைக்குழு தலைவர், மக்களின் சார்பாக, நியாயமான முறையில் இந்தக் குற்றச்சாட்டை அவர் விசாரிப்பார் என்று எதிர்பார்த்தேன். அண்மையில் 125 மில்லியன் ரூபா லஞ்சம் வாங்கியது தொடர்பாக மூன்று சுங்க இலாக அதிகாரிகள் பற்றிய விபரங்களை அவர் புலனாய்வு செய்து, கைது செய்திருந்தார். இதற்கு அவர் திறைசேரி நிதி மூலம் இந்தப் புலனாய்வை செய்திருந்தார், அதே வழியில்ல் இந்த எம்,பி க்கள் பற்றிய எனது குற்றச்சாட்டையும் புலனாய்வு செய்திருக்க முடியும், ஆனால் அவர் அதை செய்யவில்லை. இலஞ்ச ஊழலை நிறுத்த இப்படியான ஊழல்கள் விசாரிக்கப்பட்டு தணடனை வழங்கப்பட வேண்டும். இந்த எம்.பிக்களைக் கையும் மெய்யுமாகப் பிடிக்க இருந்த வாய்ப்புக் களை அவர் பயன்படுத்தவில்லை. ஆகவே இதுவும் ஒருவகை ஊழல் தான் என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

அவரது இந்த முறைப்பாட்டில் இணைக்கப்பட்டிருந்த 19 பாராளுமன்ற உறுப்பினர் பட்டியலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் எம்பிக்களான சிவஞானம் சிறீதரன், சிவப்பிரகாசம் சிவமோகன் ஆகிய இருவரின் பெயர்களும் ஊள்ளடக்கப்பட்டிருந்தன. லஞ்சம் ஊழல் தொடர்பாக அதிகம் பேசுகின்ற சிவமோகன் எம்,பி அவர்களும் வரி ஏய்ப்பு செய்கிறார் என்பது சற்று ஆச்சரியமான தகவல் தான்.

எவ்வாறாயினும், டில்றுக்ஷி விக்கிரமசிங்க கடந்தவாரம் அந்தப் பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளார். இராணுவ உயர் அதிகாரிகள் மீது விசாரணை செய்வது தொடர்பாக அதிருப்தி அடைந்து ஜனாதிபதி தெரிவித்த கருத்துக்களை அடுத்தே அவர் அந்தப் பதவியிலிருந்து விலகியதாகத் தெரியவருகிறது

தாயின் மனநிலையே சேயின் மனநிலை

ஒரு பெண் எப்போது கருவுறுகிறாளோ? அந்த ஒவ்வொரு மாற்றமும் கருவில்இருக்கும்குழந்தைக்கும்ஏற்படும். இவ்வாறு ஏற்படும் பாதிப்புக்கள் அல்லது மாற்றங்கள் குழந்தை பிறந்த பின் 2 அல்லது 3 ஆண்டுகள் வளர்ந்த பின் கூட ஏற்படும்.

- கருவுற்ற பெண்கள் குளிர்ந்த நீரில் குளிக்கக் கூடாது. ஈரத்தலையுடன் இருப்பதைத் தவிர்ப்பது நல்லது.
- மழையிலோ, மழைச்சாரலிலோ நனையைக் கூடாது. அவ்வாறு நனைய நேரிட்டால் வீட்டிற்கு வந்தவுடன் வெந்நீர் வைத்து இளம் சூடான நீரில் குளித்து உடலையும், தலையையும் நன்கு துடைக்க வேண்டும்.
- எப்போதும் நன்கு காய்ச்சி ஆறிய நீரைப்பருகுவது நல்லது. அதிக நீர் அருந்த வேண்டும். அதற்காக ஒரே நேரத்தில் அதிக நீர் அருந்தக் கூடாது. இடைவெளி விட்டு நீர் அருந்த வேண்டும்.
- அதிக சூடான நீரை அருந்துதல் நல்லதல்ல, குளிர்சாதனப் பெட்டியில் வைத்த குளிர்பானங்கள், குளிர்ந்தநீர் மற்றும் குளிர்ந்தஉணவுப் பொருட்களைத் தவிர்க்க வேண்டும். இதனால் சளி பிடிக்காமல் பார்த்துக் கொள்ளலாம். கருவுற்ற பெண்ணுக்கு சளி பிடித்தால் அது கருவில் இருக்கும் குழந்தையையும் பாதிக்கும்.
- கருவுற்ற பெண்கள் சிலபேர் குமட்டல், வாந்தி காரணமாக உணவை தவிர்ப்பார்கள். அப்படித் தவிர்ப்பதால் குழந்தைக்குத் தேவையான சத்துக்கள் கிடைக்காமல் போகும்.
- அதிககாரம், புளிப்பு உள்ள உணவுகளைத் தவிர்க்க வேண்டும், எளிதில் ஜீரணமாகும் உணவுகளை உண்ண வேண்டும்.
- சத்து மாத்திரைகளை நேரடியாக உபயோகிக்கக் கூடாது. கீரைகள், பழங்கள்,தானியங்கள், காய்கறிகள், போன்றவற்றில் உண்ண வேண்டும்.
- மதிய உணவில் ஏதாவது ஒரு கீரையை சேர்த்துக் கொள்ள வேண்டும். அதிக சூடு, அதிக குளிர்ச்சி தரும் பழங்களைத் தவிர்த்து மற்ற பழங்களைச் சாப்பிடுவது நல்லது. பானமாகச் செய்து கூட அருந்தலாம்.
- கர்ப்பிணிப் பெண்கள் சரியான நேரத்திற்குஉணவு அருந்தவேண்டும். உணவு உண்டவுடன் தூங்கக் கூடாது. சற்று ஓய்வெடுத்தாலே போதுமானது. முடிந்தவரை பகல் தூக்கத்தைத் தவிர்ப்பது நல்லது.
- தொலைக்காட்சியை அதிக நேரம் பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது. மனதைப் பாதிக்கும் காட்சிகளைப் பார்ப்பதை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.
- மூச்சுத் திணறும் அளவு மக்கள் நெருக்கடி உள்ள திருவிழா, கடை வீதிகளுக்குச் செல்வது நல்லதல்ல.
- அதிக சத்தம் போட்டு பேசுவதால் வயிற்றில் உள்ள கருவிற்கு சில அதிர்வுகள் ஏற்பட வாய்ப்புண்டு.

கரு என்பது மென்மையான பூ போன்றது அதை அழகாக பாதுகாப்பாகப் பெற்றெடுக்க வேண்டியது ஒரு தாயின் கடமை.



குழந்தைப் போராளி

சைனா கெய்ரெற்சி
தமிழில்: தேவா

காருக்குள் ஒரு புதிய மனிதன் அமர்ந்திருந்தான். வழமைபோல அப்பாவும் வாசலில் வந்து நின்றிருந்தார். ஹெலன் தன்னுடன் வந்தவனைப் பற்றிச் சொல்வதற்கு முன்னமே

"காரில் இருக்கும் மனிதன் யார்?" என அப்பா கேட்டார்.

"அவரைத்தான் நான் திருமணம் செய்து கொள்ளப் போகிறேன்" எனக் ஹெலன் சொன்னாள்.

"அவன் என்ன மொழி பேசுகிறவன்?" அப்பா அறிய விரும்பினார்.

"கிழக்கில் இருப்பவர்"

"மேற்கில், இங்கே எனது வீட்டில் அவன் என்ன செய்து கொண்டிருக்கிறான்?"

"நான் அவரை உங்களுக்கு அறிமுகப்படுத்த விரும்பியதால் தான் அவர் இங்கு வந்திருக்கிறார்."அப்பா உடனடியாகவே

"நீ அவனைத் திருமணம் செய்வதில் எனக்குச் சம்மதமில்லை" என்றார்.

"அவர் என்னை நன்றாகவே நடத்துகிறார், அவரைத் திருமணம் செய்து கொண்டால் எனது வாழ்க்கை மகிழ்சியாக அமையும்" ஹெலன் வாதம் செய்தாள்.

"நீ எனது மகளாகத் தொடர்ந்தும் இருக்கவேண்டுமென்றால் அவனைத் திருமணம் செய்துகொள்ளக் கூடாது!" அப்பா பயமுறுத்தினார்.

எனது சகோதரி அழத் தொடங்கினாள். காருக்குப் போவதற்குத் திரும்பிய அவள் ஏதோவொரு பெரும் சுமையைச் சுமப்பவள் போலத் துவண்டிருந்தாள். காரின் கதவத் திறந்து கொண்டு திரும்பி அப்பாவைப் பார்த்து

"குறைந்தபட்சம் இவருக்கு முகமனாவது கூறமாட்டீர்களா?" என அப்பாவைக் கேட்க

"இல்லை"

என உறுமிய அவர் "ஒன்றை மட்டும் நினைவில் வைத்துக்கொள் அவனை நீ திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் என் வாசற்படி மிதிக்கக் கூடாது" என்றார். நான் அப்பாவைப் பார்த்தேன். அவரோ அரவமேயில்லாது ஒரு பாம்பைப் போல வீட்டினுள் நுழைந்தார்.

காரில் இருந்தவனைக் ஹெலன் அனுப்பி வைத்தாள். மெதுவாக நடந்து வீட்டிற்குள் வந்த ஹெலன் அழுது கொண்டேயிருந்தாள். அவளின் நடத்தையை என்னால் புரிந்து கொள்ளவே முடியவில்லை. என்னுள் துக்கமும் கோபமும் மாறி மாறி வந்து போயின.

"அப்பா கோபக்காரர் என்பது உனக்கு நன்றாகவே தெரியும். வந்த மனிதனுடன் சந்தோசமாக இருந்தாயென்று நீ சொல்கிறாய், பின்பேன் என்னையும் கூட்டிக்கொண்டு அவனுடன் நீபோகவில்லை?" அவள் அமைதியாக எனக்குப் புரிய வைக்க முயன்றாள்.

"ஒரு பெண்ணிற்குத் திரும்பிச் செல்ல ஒரு வீடில்லாவிடின் அவள் தனது கணவனிடம் எந்த மதிப்பையும் பெறமாட்டாள், பின்பு அங்கு நமக்கு எந்த உரிமையும் இருக்கப் போவதில்லை"

"இனி என்ன செய்யப் போகிறாய்?"

"என்ன செய்வதென்றே தெரியவில்லை, எனக்குப் போக்கிடமில்லை..." எங்களுடனேயே இருக்குமாறு நான் அவளைக் கேட்டுக் கொண்டேன்.சிற்றன்னையின் வெறுப்புக் கொப்பளிக்கும் அதிகாரத்திற்கு அவள் தன்னை அர்பணித்துக் கொள்ள வேண்டிய பரிதாப நிலை. அன்றிரவு தூங்குவதற்கு முன்னதாகப் பற்றீசியாவைப் பற்றிச் சொல்லி அவர் எங்களுக்கு எங்களது உண்மையான அம்மாவைக் கண்டு பிடிக்கச் சிலவேளை உதவாலாமெனச் சொன்னேன். அடுத்த நாள் காலையில் ஹெலன் தலை நிமிர்ந்து துணிவாக நின்றாள். "இனி ஒரு போதும் நான் இங்கு திரும்பிவரப்போவதில்லை" எனப் போகும்போது கூறிச் சென்றாள். அவள் எங்கள் அம்மாவைக் கண்டுபிடிக்க வேண்டுமென என் உள்ளத்திலிருந்து வாழ்த்தினேன்.

அப்பா குறை கூறத்தொடங்கினார். "எல்லோரும் வீட்டைவிட்டுப் போவதும் பிரச்சனைகள் வந்ததும் மீண்டும் தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு திரும்பி வருவதும் வழமையாகிவிட்டது." இன்றும் அந்தச் சொற்கள் ஏதோ நேற்றுச் சொன்னது போல எனக்கு ஞாபகமிருக்கிறது. அவரது மடைமைக்கும் குழந்தைகளை விளங்கிக் கொள்ள முடியாத தன்மைக்கும் எதிராக என்னால் தலையை ஆட்டி அதிருப்தியைத் தெரிவிக்கத்தான் முடிந்தது. அதுவும் அவரின் முதுக்குப் பின்னால்.

அந்த நாட்களில் மக்கள் இனம் தெரியாதவர்களால் கடத்தப்படுவதும் எந்தவிதத் தடயமுமின்றிக் காணாமற் போவதும் வழமையாய் இருந்தன. ஹெலன் போனதற்கு மறு நாள் குழந்தைகள் நாங்களும் அப்பாவும் விறாந்தையில் அமர்ந்திருந்தோம். முன்பின் தெரியாத இருவர் வந்து இராணுவ முகாமுக்கு உடனடியாக வரவேண்டும் என அப்பாவிற்குக் கட்டளையிட்டனர்.

"எதற்காக என்ன குற்றச்சாட்டின் பேரில் என்னை முகாமுக்கு அழைக்கிறீர்கள்?" என அப்பா கேட்க

"நீ அங்கு வந்ததும் அதைத் தெரிந்து கொள்வாய்!" என அவர்கள் சொன்னார்கள்.

"ஏன் நீங்கள் ஒரு வாகனத்தில் வரவில்லை? சீருடைகள் அணியவில்லை?" அப்பா கேட்டார். "மடத்தனமான கேள்விகளைக் கேட்காதே! உடனடியாக எங்களுடன் புறப்படு! அங்கு வந்ததும் எல்லா விளக்கங்களும் உனக்குச் சொல்லப்படும்."

தொடரும்...



கனடாவும் அகதிகளும்

கடந்த இரு வாரங்களுக்கு முன் எழுதிய கட்டுரையில் கனடாவின் நியூவுண்லாந்துக் கடலிலே காப்பாற்றப் பட்ட 155 தமிழர்களும் பல சிக்கல்களையும், சவால்களையும் எதிர்கொண்டு ஈற்றில் Ministers Permit பெற்றுக் கொண்டார்கள் என்று பார்த்தோம். இந்த Ministers Permit ஒரு வருடத்திற்கு மாத்திரமே இவர்களுக்கு வழங்கப்பட்டது. இதன் பின்னர் இவர்களில் பெரும்பான்மையோர் மொன்றியால் மாநகரிலும், மிகுதியானோர் ரொறன்ரோவிலும் தங்கள் கனடா வாழ்க்கையைத் தொடங்கினர். இவர்கள் எல்லோருமே அதற்கு 5 மாதங்களுக்கு முதல் கனடிய மத்திய அரசினால் கொண்டுவரப்பட்ட ஒரு விசேட துரிதகதி அகதி ஏற்புத் திட்டம் மூலம் நிரந்தர வதிவுடமை பெற்றுக் கொள்ள ஒரு வாய்ப்பை தவறவிட்டனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்த தமிழர்கள் மத்திய அரசினால் கனடாவிற்குள் உள்வாங்கப்பட்டு ஒரு வருட காலத்திற்கு கனடாவில் வசிக்கும் உரிமையை தற்காலிகமாகப் பெற்றிருந்தாலும், கனேடிய மக்கள் மத்தியிலும் கனடிய ஊடகங்கள் மத்தியிலும் கனடாவினுடைய அகதிக் கொள்கை குறித்து பலத்த வாதப்பிரதிவாதங்கள் நிகழ்ந்துகொண்டிருந்தன.

இதனால் இந்த 155 பேருடைய கனடா வாழ்க்கையையும் அவர்கள் கனடாவிலே எப்படி தங்கள் வாழ்க்கையை நடாத்துகிறார்கள் என்பதைப்பற்றி ஊடகங்கள் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தன. ஆனால் எம்மவர்களோ கனடாவில் கால்பதித்த ஒன்றிரண்டு மாதங்களிலேயே கையில் கிடைத்த வேலையை எடுத்துக் கொண்டு, வேலை செய்து வாழத் தலைப்பட்டனர். இவர்களுடைய இந்த நடவடிக்கைகளால் இவர்களைக் குறித்த ஒரு நல்ல அபிப்பிராயம் ஊடகங்கள் மூலமாக மக்களுக்குத் தெரிய வந்தது.

இவையெல்லாம் ஒருபுறத்தில் நடந்து கொண்டிருக்க, அகதிகள் சேவைகளுக்காக உலகளாவிய ரீதியிலே வழங்கப்படும் ஒரு உன்னத விருதான Nansen விருது கனடா மக்களுக்கு கிடைக்கிறது என்று அந்த விருதை வழங்கும் சர்வதேச சபையால் அறிவிக்கப்பட்டது. 1951ம் ஆண்டிலிருந்து இந்த விருது அகதிகளுக்காகச் சேவையாற்றும் ஒரு தனிநபருக்கோ அல்லது ஒரு அமைப்பிற்கோதான் அதுவரை காலமும் வழங்கப்பட்டு வந்தது. முதல் முறையாக இந்த விருதின் வரலாற்றிலே ஒரு நாட்டு மக்கள் அனைவரையும் உள்ளடக்கி இந்த விருது அறிவிக்கப்பட்ட பொழுது சர்வதேசம் எங்கும் புருவங்கள் உயர்த்தப்பட்டு, சர்வதேச கவனம் முழுவதும் கனடாவின்பால் திரும்பியது.

இந்த விருதைப் பெற்றுக் கொண்டதன் மூலம் கனடா நாட்டிலுள்ள ஒருசில அமைப்புக்கள் மட்டுமல்ல, கனடா நாட்டின் முழு மக்களுமே அகதிகள் விடயத்திலே கவனம் செலுத்துகிறார்கள் என்பதை சர்வதேசம் ஏற்றுக் கொண்ட ஒரு செய்தியாக அந்த விருது அமைந்திருந்தது. 1986ம் ஆண்டு இலையுதிர் காலப் பகுதியிலே ஒட்டாவா நகரில் வைத்து கனடாவின் அன்றைய மகாதேசாதிபதியாக இருந்த சுவே அம்மையார் அவர்கள் கனடா சார்பாக இந்த விருதைப் பெற்றுக் கொண்டார். இந்த விழாவிலே அன்றைய கனடிய வெளிவிவகார அமைச்சர் திருமதி ப்ளோரா மக்டொனல்ட் அவர்களும், நம் தமிழர்கள் கடலிலே தத்தளித்து அகதிகளாக உள்வாங்கப்பட்டபொழுது அவர்களுடைய அரச கோட்புக்களிலே மத்திய அரசின் சார்பாக மிகப்பெரும் பங்காற்றிய அன்றைய குடிவரவுத்துறை ராஜாங்க அமைச்சர் ஜெரி வீனர் அவர்களும் உடனிருந்தனர். 70களிலிருந்து 86வரை கனடா சர்வதேச ரீதியிலே அகதிகளுக்காக ஆற்றிய பங்கிற்காக இந்த விருது கொடுக்கப்பட்டது என்று எடுத்துக் கொண்டாலும், கனடிய மக்களாலே அத்திலாந்திக் சமுத்திரத்திலே வைத்து ஈழத்தமிழர்கள் காப்பாற்றப்பட்ட ஆண்டிலே இந்த விருது கனடிய மக்களுக்குக் கிடைத்தபடியால் எம்மவரின் கப்பல் வருகையும் இதற்கு பங்களித்திருக்கலாம் என்று நாம் எடுத்துக் கொள்ளலாம் என்று நான் நம்புகிறேன்.

1986ம் ஆண்டு இப்படி பரபரப்பாகக் கழிந்து முடிய 1987ம் ஆண்டிலே கனடாவின் கிழக்குக் கரையோரம் சீக்கிய மக்களுடன் வந்து சேர்ந்த கப்பல் இன்னொரு புயலைக் கிளப்பியது. சில மாதங்களுக்கு முன்னதாகவே தமிழர்களுடன் வந்து சேர்ந்த அகதி விவகாரத்தை ஒரளவிற்கு முடித்து வைத்தோம் என்று நிம்மதிப் பெருமூச்சுடன் இருந்த அன்றைய பிரதமர் பிரையன் மல்ரோனி அவர்களுக்கு சீக்கிய மக்களுடன் வந்த இந்தக் கப்பல் ஒரு பெரிய தலையிடியைக் கொடுத்தது. மீண்டும் கனடியப் பாராளுமன்றத்திலே அகதிகள் வருகை குறித்தும், அவர்களுக்கான கனடாவின் கொள்கை குறித்தும் பெரும் வாதப் பிரதிவாதங்கள் எழுந்தன. பல நேரங்களிலே இவை மிகச் சூடாகவும் இருந்தன.

இதனால் கனடாவிற்குள்ளே இப்படியான கப்பல்கள் மூலம் நுழைய முற்படும் அகதிகளுக்காக விசேட சட்டம் இயற்றப்பட வேண்டும் என்று பலர் குரல் கொடுக்கத் தொடங்கினர். இதனால் மல்ரோனி அரசு இதைப்பற்றி ஆராய ஒரு விசேட குழுவை நியமித்தது. அந்தக் குழு பல மாதங்கள் இதைப்பற்றி ஆராய்ந்து பல பரிந்துரைகளை அரசுக்கு சிபார்சு செய்தது. அந்தப் பரிந்துரைகள் மூலம் ஒரு புதிய சட்டம் வரலாம் என்று பலதரப்பிலும் கனடாவிலே எதிர்பார்ப்புக்கள் எழுந்தன.

அப்படி ஒரு புதிய சட்டம் வந்ததா அதற்கு என்ன நடந்தது என்பதையெல்லாம் அடுத்த வாரத்தில் பார்ப்போம்.



– டேவிட் பூபாலபிள்ளை



கற்குடாவில் நடந்த அநியாய மரணங்கள்!

ஒரே குடும்பத்தில் நால்வர் மரணம்!

கடந்த மாதம் 18ம் திகதி ஞாயிற்றுக்கிழமை. மட்டக்களப்பின் கல்குடா பிரதேசம் பெரும் சோகத்தை சந்தித்தது. ஒரே குடும்பத்தை சேர்ந்த நான்கு பேரின் மரணமும், அதனை தொடர்ந்து ஊரில் ஏற்பட்ட அசாதாரண நிலைமையும் அந்த பிரதேசத்தையே உலுக்கிவிட்டுள்ளது.

கடலில் குளிக்கச் சென்ற சகோதரர்கள் இருவர் மரணமாகியதுடன், அவர்களின் பெற்றோர் தூக்கிட்டு தற்கொலை செய்தது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சம்பவதினத்தன்று மாலை. கடலில் குளிக்கச் சென்ற இளைஞர்கள் சிலர் கடலில் மூழ்கிவிட்டார்கள் என்ற செய்தி காட்டுத்தீயாக பரவியது. கல்குடாவே கதிகலங்கியது. மூழ்கியது யாரென்பது தெரியாத நிலையில் தமது பிள்ளைகள், சகோதரர்கள்தான் மூழ்கியிருப்பார்களோ என்ற சந்தேகத்தில் சம்பவம் நடந்த கல்குடா கடற்படை முகாமிற்கு அருகிலுள் கடற்கரைக்கு கிராமமே பதைபதைப்புடன் ஓடிச்சென்றது.

உடனடியாக செயற்பட்ட பிரதேச மீனவர்கள் மூழ்கியவர்களை தேட ஆரம்பித்தார்கள். கடற்படை சுழியோடிகளும் இணைந்து கொண்டனர். உயிருக்கு போராடிக்கொண்டிருந்த ரஜிதன் (16), டிலக்ஸன் (16) இருவரையும் மீட்டெடுத்தனர். உடனடியாக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர். இவர்கள் கல்குமா நாமகள் வித்தியாலய மாணவர்கள்.

சகோதரர்களான சண்முகம் சதீஸ்குமார் (21), சண்முகம் சுரேஸ்குமார் (18) என்பவர்களே காணாமல் போயிருந்தனர். தொடர்ந்த தேடுதலில் மறுநாள் (19) இருவரும் சடலமாக மீட்கப்பட்டனர்.

வைத்தியசாலையிலிருந்து திரும்பிய டிலக்ஸன் இந்த சம்பவம் பற்றி விபரிக்கையில் 'காலம்;சென்ற சதீஸ்குமார் பட்டியடிச்சேனை கல்குடாவிலிலுள்ள சிகைஅலங்கரிப்பு நிலையத்தில் வேலை செய்கிறார். அன்று வீட்டிற்கு வந்து, கதைப்பதற்காக எம்மை சிகைஅலங்கரிப்பு நிலையத்திற்கு அழைத்து சென்றார்.

வழக்கமாக இந்த கடையில் நண்பர்கள் சேர்ந்து கதைப்பது வழக்கம். கதைத்துக்கொண்டிருந்தபோது, சதீஸ் குமாரின் மனைவிக்கு வீட்டில் மின்சாரம் தாக்கியதாக தொலைபேசி அழைப்பு வந்தது. மனைவி கர்ப்பவதியாக இருந்தார். என்னையும் அழைத்துக்கொண்டு வீட்டுக்கு சென்றார். அது சிறிய தாக்கம். இளநீர் வெட்டிக்கொடுத்தார். பிறகு இருவரும் கடைக்கு திரும்பி வந்தோம்.

கதைத்துக் கொண்டிருந்தபோது, கடலுக்கு செல்வோமா எனக் கேட்டார். உடனே எல்லோரும் கிளம்பினோம். இறந்த இருவருடன் இன்னும் மூவருமாக ஐந்து பேர் சென்றோம்.

கடலுக்கு போகும்போது நாவல்மரத்தடியில் எங்கள் சைக்கிள்கள் மோதி விபத்து நடந்தது. இது ஒரு எச்சரிக்கைபோல. நாங்கள் அதை கவனிக்காமல் சோடாவும், சீவல் பக்கட்டும் வாங்கிக்கொண்டு போனோம்.

கடற்கரையோரமாக இருந்து அதை சாப்பிட்டுவிட்டு குளித்தோம். நான் கரையில் நின்றேன். மற்றவர்கள் கொஞ்சம் ஆழமாக சென்றுவிட்டார்கள். சதீஸ் ஒரு பக்கமாகவும், மற்றையவர்கள் ஒரு பக்கமாகவும் பிரிந்து நின்றார்கள்.

அப்போதுதான் விபரீதம் நிகழ்ந்தது. சதீஸ்குமார் அலையில் அடித்து செல்லப்பட்டார். தனது சகோதரன் அடித்து செல்லப்படுவதை பார்த்த சுரேஸ்குமார் காப்பாற்றுவதற்காக அவரை நோக்கி சென்றுள்ளார். அவரும் அலையால் இழுத்து செல்லப்பட தொடங்கினார்.

கரையில் நின்று இவற்றை அவதானித்த நான், காப்பாற்றும்படி உரத்த குரலில் சத்தமிட தொடங்கினேன். அந்த இடத்தில் யாரும் இருக்கவில்லை. காப்பாற்ற யாரும் வரமாட்டார்கள் என்பதை தெரிந்ததும் நான் அவர்களை காப்பாற்ற முயன்றேன்.

அலையில் அடித்து செல்லப்பட்டவர்களை காப்பாற்ற முடியவில்லை. மற்றைய இருவரையும் கரைக்கு கொண்டு வந்தேன். சுரேஸை காப்பாற்ற முயன்றேன். முடியவில்லை. கையில் சிறிய கொடி இருந்திருந்தாலாவது அவர்களை காப்பாற்றியிருப்பேன்' என்றார் உடைந்த குரலில்.

பின்னர் காப்பாற்றிய இருவருடன் இணைந்து தோணியில் தேடும் முயற்சி செய்போதும், மற்ற இருவரும் சோர்வடைந்திருந்ததால் ஒன்றும் செய்ய முடியாமல் போய்விட்டதாகவும் கூறினார்.

அதன்பின்னரே பொலிஸ் அவசர இலக்கத்தை தொடர்பு கொண்டுள்ளனர். உடனடியாக கல்குடா பொலிசார் சம்பவ இடத்திற்கு வந்து தேடுதல் மேற்கொண்டுள்ளனர். பின்னர் கடற்படையினரும் தேடுதலில் இணைந்தனர்.

மறுநாள் சடலங்கள் மீட்கப்பட்ட பின்னர் கல்குடாவே சோகமயமானது. இந்த சோகத்தைமேலும் அதிகமாக்கியதுஉயிரிழந்த சகோதரர்களின் பெற்றோரின் தற்கொலை.

வேலுப்பிள்ளை சண்முகம் (49), சண்முகம் யோகலட்சுமி (46) ஆகியோர் மறுநாள் திங்கட்கிழமை அதிகாலை வீட்டு முற்றத்திலுள்ள முந்திரி மரத்தில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.

பிள்ளைகள் கடலில் மூழ்கிய செய்தி வெளியானதும் அன்றையதினமே கடலில் குதிக்க இருவரும் பலமுறை முயற்சித்துள்ளனர். எனினும், அவர்களின் மூத்த மகள் அதை கண்டு தடுத்துள்ளார். அவர்களிற்கு நிறைய ஆறுதல் வார்த்தைகள் கூறி, வீட்டில் படுக்க வைத்துள்ளார். அறையில் அவர்கள் தூங்கிய பின்னர் மகள் உறங்கியுள்ளார். அவர் உறங்கிய பின்னர் தூக்கிட்டு தற்கொலை செய்துள்ளனர்.

அந்த குடும்பத்தில் இப்பொழுது எஞ்சியுள்ளது மூத்தமகள் மாத்திரமே. ஆவர் திருமணம் முடித்து கணவன், இரண்டு குழந்தைகளுடன் வாழ்கிறார். அவரது மூத்த சகோதரி ஏற்கனவே அகால மரணமடைந்தது குறிப்பிடத்தக்கது.

இந்த அனர்த்தங்கள் சூனியத்தால் நிகழ்ந்தென்றும் ஊரில் பேசப்பட்டது. இதனையடுத்து இறந்தவர்களின் வீட்டு வளவில் பூசாரியொருவரை கொண்டு கழிப்பு கழிக்கப்பட்டதாகவும் பிரதேசவாசிகள் கூறுகிறார்கள்.

இதனைவிட, கல்குடாவில் இன்னொரு வதந்தியும் பரவுகிறது. இந்த சம்பவத்தில் பின்னர் அங்கு பேய் நடமாட்டம் அதிகரித்துள்ளதாக மக்கள் அச்சப்படுகின்றனர். இந்த வதந்தி அச்சம் முழு ஊரையும் பிடித்துள்ளது. இதனால் மாலை ஆறுமணிக்கே வீடுகளில் அனேகமானவர்கள் தஞ்சமடைந்துவிடுகிறார்கள்.

மொத்தத்தில், மனதை கனக்க வைக்கும் நான்கு மரணங்களும் கல்குடாவை நிலைகுலைய வைத்துள்ளதென்பதே உண்மை.

- குகதர்சன்







சென்னையில் நடந்த 'நாடோடி மன்னன்' வெற்றி விழாவில் எம்.ஜி.ஆருக்கு வாள் பரிசளிக்கிறார் அண்ணா. அருகே என்.வி. நடராஜன் (இடமிருந்து 2வது) கருணாநிதி, முரசொலி மாறன் (எம்.ஜி.ஆருக்கு பின்னே), நடிகர் திருப்பதிசாமி, அன்பழகன் உள்ளனர்.

எம்.ஜி.ஆர் 100 நெடுந்தொடர் 26

படம் ஓடினால் மன்னன், ஓடாவிட்டால் நாடோடி!

எம்.ஜி.ஆர். ஒரு காரியத்தில் இறங்கினார் என்றால் என்ன இடையூறு வந்தாலும் அதை முடிக்காமல் விடமாட்டார். அதற்கு மிகப்பெரிய உதாரணம் அவர் முதன் முதலில் தயாரித்து, இயக்கி, நடித்து பிரம்மாண்டமான வெற்றி பெற்ற படமான 'நாடோடி மன்னன்'.

'மலைக்கள்ளன்', 'அலிபாபாவும் 40 திருடர்களும்', 'மதுரை வீரன்', 'தாய்க்குப் பின் தாரம்' என்று வெற்றிப்படிகளில் ஏறி புகழின் உச்சியில் இருந்த எம்.ஜி.ஆர் நடிப்பதற்காக பல்வேறு படவாய்ப்புக்கள் காத்திருந்தன. ஆனால், அதையெல்லாம் ஒதுக்கிவிட்டு தனது முழு கவனத்தையும் 'நாடோடி மன்னன்' படம் எடுப்பதில் திருப்பினார் எம்.ஜி.ஆர்! அது ஏன் என்பதற்கான விளக்கமும் கொடுத்தார்.

"நான் சொந்தத்தில் 'நாடோடி மன்னன்' படத்தை ஏன் ஆரம்பித்தேன்? எனக்காக எத்தனையோ படங்கள் காத்திருக்கும் நேரத்தில் அதில் நடித்து முடித் தாலே வாழ்க்கைக்குதேவையான பணம்சம்பாதித்து நிம்மதியாக இருக்கலாம். ஆனால், 'நாடோடி மன்னன்' ஒரு பரிசோதனை முயற்சி. என் விருப்பப்படி செய்து அதற்கு மக்களின் பதில் என்ன? என்று எதிர்பார்க்கிறேன்" என்றார் எம்.ஜி.ஆர்.

'நாடோடி மன்னன்' படத்துக்கான கனவு 20 வயதிலேயே எம்.ஜி.ஆரின் மனதில் கருக்கொண்டது. படப்பிடிப்பு ஒன்றில் கலந்து கொள்வதற்காக கொல்கத்தா



'மலைக்கள்ளன்' படத்தில் எம்.ஜி.ஆருடன் பானுமதி.

– ஸ்ரீதர் சுவாமிநாதன்

சென்ற எம்.ஜி.ஆர், அங்கு 'இஃப் ஐ வேர் கிங்' என்ற படத்தைப் பார்த்தார். இந்தப் படமே எம்.ஜி.ஆர் மனதில் விதை யாய் விழுந்து விருட்சமாக வளர்ந்தது. அதன் விளைவுதான் 'நாடோடி மன்னன்.'

படத்துக்காக பணத்தை பணம் என்று பார்க்காமல் எம்.ஜி.ஆர் செலவழித்தார். சில நேரங்களில் அவரது அண்ணன் சக்ரபாணியே கவலைப்படும் அளவுக்கு கடன் வாங்கி செலவு செய்தார். காட்சி களின் பிரம்மாண்டத்துக்கு மட்டுமல்ல; படத்தில் பணியாற்றும் நடிகர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் தாராளமான சம்பளமும் வழங்கப்பட்டது.

படப்பிடிப்பு குழுவினர் விரும்புவதை சாப்பிடுவதற்காக படப்பிடிப்பின்போது மினி ஓட்டலையை எம்.ஜி.ஆர் ஏற்பாடு செய்து விட்டார். அந்தக் காலத்தில் பணக் காரர்கள் மட்டுமே குடிக்கும் 'ஓவல்டின்' என்ற பானம் பெரிய அண்டாக்களில் வைக்கப் பட்டது. முதன்முதலாக பல தொழிலாளர்கள் 'ஓவல்டின்' குடித்ததே அப்போதுதான்.

படம் முடிந்த பிறகு "வெற்றியோ, தோல்வியோ அது மக்கள் தீர்ப்பைப் பொறுத்தது. படம் ஓடினால் நான் மன்னன், ஓடாவிட்டால் நாடோடி" என்று சர்வசாதாரணமாக சொன்னார் எம்.ஜி.ஆர்.

மக்கள் எம்.ஜி.ஆரை மன்னனாக்கினர். அதுவரை வெளியான படங்களை வசூலில் புரட்டிப் போட்டு அமோக வெற்றி பெற்றது 'நாடோடி மன்னன்'. 19 ஆண்டுகள் கழித்து தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்து எம்.ஜி.ஆர் நிஜமாகவே முடிசூடியதற்கு கால்கோள் நடத்தியது 'நாடோடி மன்னன்'.

மதுரையில் பல லட்சம் மக்கள் முன்னிலையில் நடந்த வெற்றி விழாவைத் தொடர்ந்து சென்னையிலும் 30.11.1958ல் எஸ்.ஐ.ஏ.ஏ. திடலில் பேரறிஞர் அண்ணா தலைமையில் வெற்றி விழா கொண்டாட்டம் நடந்தது. விழாவில் எம்.ஜி.ஆருக்கு வீரவாளை அண்ணா பரிசளித்தார்.

இந்தக் கூட்டத்தில்தான், "மரத்தில் பழுத்த கனி தங்கள் மடியில் விழாதா என்று பலரும் எதிர்பார்த்திருக்க, நல்லவேளையாக அந்தக் கனி என் மடியில் விழுந்தது. அதை எடுத்து என் இதயத்தில் வைத்துக் கொண்டேன். எம்.ஜி.ஆரை பாராட்டுவது என்னை நானே பாராட்டிக் கொள்வது போலாகும்" என்று அண்ணா பேசினார்.

'நாடோடி மன்னன்' பற்றி குறிப்பிடும் போது நடிகை பானுமதி பற்றி சொல்லியாக வேண்டும். நடிப்பு, தயாரிப்பு, இசை, இயக்கம் என்ற பன்முகத்திறமை கொண்டவர் பானுமதி. 'மலைக்கள்ளன்', 'மதுரை வீரன்' என்று ஏற்கெனவே வெற்றி பெற்ற படங்களில் எம்.ஜி.ஆருக்கு பானுமதியே ஜோடி. 'நாடோடி மன்னன்' படத்திலும் அவரையே நாயகியாக நடிக்க எம்.ஜி.ஆர். ஒப்பந்தம் செய்தார்.

பானுமதி அந்தக் காலத்திலேயே சுதந்திர மாக செயல்படும் நடிகை. எம்.ஜி.ஆரும் அப்படியே. தான் விரும்புகிறபடி காட்சிகள் வரும்வரை எம்.ஜி.ஆர் விடமாட்டார். அதனால்தான் இன்றும் அவர் படங்களை ரசிக்க முடிகிறது. எம்.ஜி.ஆர் மீண்டும் மீண்டும் காட்சிகளை எடுப்பது பானுமதிக்கு பிடிக்கவில்லை. "எடுத்த காட்சிகளையே எத்தனை முறை எடுப்பீங்க?" என்று எம்.ஜி.ஆரைப் பார்த்து கேட்டார்.

சக நடிகையின் ஒத்துழைப்பு இப்படி இருக்கும்போது கோபம் வந்தாலும், எம்.ஜி.ஆர் அமைதியாகவே பதில் சொன்னார், "படத்தின் தயாரிப்பாளர் மட்டுமின்றி, இயக்குநரும் நான்தான். என் இயக்கத்தில் நடிக்க விருப்பம் இருந்தால் நடிங்க. இல்லைன்னா விட்டுடுங்க." இதைத் தொடர்ந்து, படத்தில் இருந்து விலகிக் கொண்டார் பானுமதி. பிறகு, அவர் இறப்பது போல காட்சிகள் மாற்றப்பட்டு நடிகை சரோஜா தேவியை கதாநாயகியாக அறிமுகப்படுத்தினார் எம்.ஜி.ஆர்.

கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் ஒருவரின் திறமையை எம்.ஜி.ஆர் மதிப்பார். படத்தில் இருந்து பாதியில் விலகினாலும் சென்னையில் நடந்த வெற்றி விழாவுக்கு பானுமதியையும் பெருந்தன்மையுடன் அழைத்து, அவருக்கும் விருது வழங்கினார் எம்.ஜி.ஆர்.

அதன் பின்னரும், எம்.ஜி.ஆர் பானுமதி நடிப்பில் 'ராஜா தேசிங்கு', 'கலை அரசி', 'காஞ்சித் தலைவன்' ஆகிய படங்கள் வெளியாயின. பன்முகத் திறமை மிக்க பானுமதிக்கு தமிழக அரசின் சார்பில் அதுவரை 'கலைமாமணி' பட்டம் வழங்கப்படாததை அறிந்த எம்.ஜி.ஆர், தான் முதல்வராக இருந்தபோது 'கலைமாமணி' விருதை பானுமதிக்கு வழங்கி கவுரவித்தார்.

எம்.ஜி.ஆர் நல்ல இசைஞானம் உடையவர். 'நாடோடி மன்னன்' படப்பிடிப்பின் போது ஒருநாள், இசையமைப்பாளர் எஸ்.எம். சுப்பையா நாயுடுவுடன் பாடல்களுக்கான இசையமைப்பு பற்றி எம்.ஜி.ஆர் ஆலோசித்துக் கொண்டிருந்தார். அப்போது, "நீங்கள் இசையமைப்பில் எல்லாம் தலையிட வேண்டுமா?" என்று எம்.ஜி.ஆரிடம் கேட்டார் பானுமதி. இசை பற்றி எம்.ஜி.ஆருக்கு பெரிதாக ஒன்றும் தெரிந்திருக்காது என்ற எண்ணம் பானுமதிக்கு.

எம்.ஜி.ஆருக்கு நினைவாற்றல் அபாரம். எத்தனை ஆண்டுகள் ஆனாலும் எதையும் மறக்க மாட்டார். பானுமதி கேட்ட கேள்விக்கு, 27 ஆண்டுகளுக்குப் பின் முதல்வராக இருந்தபோது செயல்வடிவில் அவருக்கு பதிலளித்தார் எம்.ஜி.ஆர்.

தமிழக அரசு இசைக் கல்லூரியின் முதல்வராக பானுமதியை எம்.ஜி.ஆர். நியமித்தார். பின்னர், அந்த பதவியின் அந்தஸ்து மேம்படுத்தப்பட்டு இயக்குநர் மற்றும் முதல்வராக பானுமதி பதவி வகித்தார். 2005ம் ஆண்டு பானுமதி மறைந்த தினம், எம்.ஜி.ஆர். நினைவு நாளான டிசம்பர் 24ம் தேதி.

தொடரும்...

பழங்கள் ஈற்றுணாக்களுக்குள் சிறந்தவை எனலாம். ஏன்ன தான் ஐஐஸ்கிறீம் பாயாசம் கடித்தாலும் பழங்கள் உட்கொள்வதை போல் வருமா? அதவும் நமது ஊருக்கே உரித்தான வாழைப்பழம் போல் எதுவுமே வருவதில்லை. பெரும்பாலான நோய்களுக்கு மருத்துவர்கள் பரிந்துரை செய்வதும் வாழைப்பழத்தை தான். அப்படி இருக்கையில் உங்கள் பிள்ளைகளுக்கும் வாழைப்பழத்தை தாராளமாக கொடுங்கள். அதற்கு முன்னர் வாழைப்பழத்தின் பயன்கள் பற்றி கொஞ்சம் அறிந்து கொள்ளுங்கள்.

போசாக்கு மட்டம்.

வாழைப்பழங்களில் அதிகளவில் விற்றமின்களும் கனிப்பொருட்களும் கூட இருக்கின்றன. அளவில் சற்றுப்பெரிய வாழைப்பழமொன்றில் விற்றமின் ஏ உட்பட தயமின் 15 மில்லிகிராமும் இறைபோபிலேவின் 0.82 மில்லிகிராம்,29 மைக்ரோகிராம் போலிக்கமிலம் என்பன உள்ளன. கர்பிணித் தாய்மார்களும் குழந்தைப் பாக்கியத்தை எதிர்பார்த்திருக்கும் பெண்களும் தினமும் 3 வாழைப்பழங்களைச் சாப்பிடுவதால் ஒரு நாளைக்குத் தேவையான போலிக்கமிலம் அவர்களுக்குக் கிடைக்கின்றது. மேலும் கற்பிணிப் பெண்களின் வாந்தியைக் கட்டுப்படுத்தவும் வாழைப்பழம் உதவுகின்றது.

குருதி அழுத்தம்.

வாழைப்பழத்தில் உள்ள பொற்றாசியமும் அளவான உப்பும், குருதி அழுக்கத்தைக் கட்டுப்படுத்துகின்றன. மேலும் உளவியல் பிரச்சினைகளால் அவதியுறுபவர்களும் வாழைப்பழம் உண்பதால் நிவாரணம் பெறுகின்றனர்.

ஞாபகசக்தி, கிரகிக்கும் ஆற்றல்

ஒருவரின் ஞாபகசக்தியை மேம்படுத்தவும்,கிரகிக்கும் ஆற்றலை விருத்தி செய்யவும், வாழைப்பழம் மிகவும் துணைபுரிகின்றது. இங்கிலாந்தில் 200 இற்கும்



வாழைப்பழம் சாப்பிடுங்கள்

மேற்பட்ட மாணவர்களிடையே நடத்தப்பட்ட ஆய்விலிருந்து இது புலனாகின்றது.

புகைப்பிடித்தல்

புகைப்பிடித்தலுக்கு அடிமைப்பட்டுள்ளவர்களை அதிலிருந்து மீட்டெடுப்பதற்கும், வாழைப்பழம் துணைபுரிகின்றது. இதில் உள்ள விற்றமின் ஏ, சீ, பீ6, பீ12 போன்றவற்றின் செயற்பாட்டினால் புகைப் பிடிப்பவர்களுக்கு தாம் எதிர்பார்க்கின்ற நிம்மதியும் சந்தோசமும் கிடைக்கின்றனவாம். எனவே நாளடைவில் அவர்கள் புகைப் பிடிப்பதைக் கைவிடுவர். இதை நீண்ட காலத்திற்குத் தொடர்ந்து செயற்படுத்த வேண்டும். அப்போது தான் அதன் முழுமையான அனுகூலத்தைப் பெறக் கூடியதாக இருக்கும். அத்துடன் வாழையிலுள்ள மெக்னீசியம் பொற்றாசியம் என்பவற்றின் செயற்பாட்டினால் உடலிலுள்ள நிக்கொட்டினின் அளவும் குறைந்து விடும்.

மாரடைப்பு.

தினமும் வாழைப்பழம் உட்கொள்வதனால் மாரடைப்பு ஏற்படுவதற்கான வாய்ப்பு 40வீதத்தால் குறைவடையச் சாத்தியம் இருப்பதாக இங்கிலாந்தில் நடத்தப்பட்ட ஆய்வொன்றிலிருந்து தெரியவந்துள்ளது.

மூலவியாதி

மூலவியாதியால் அவதிப்படுபவர்கள் தினமும் வாழைப்பழம் சாப்பிட்டு வந்தால் அதன் தாக்கத்திலிருந்து ஓரளவுக்கேனும் தம்மை காத்துக் கொள்ளலாம். குருதியில் ஏற்படக்கூடிய பல்வேறுபட்ட நோய்களுக்குமான எதிர்ப்பு சக்தி இதில் அடங்கியுள்ளது. வாழைப்பழத்திலுள்ள 2.6 வீதமான தாதுப் பொருட்களினால் இந்நிலை கட்டுப்படுத்தப் படுகின்றது. சாம்பல் வாழை, பழமாகவும் சமைத்துச் சாப்பிட உகந்தது. இதிலும் மேற்குறிப்பிட்ட நோய்களை எதிர்க்கக் கூடிய சக்தி இருக்கின்றது. எனவே தினமும் உணவு உட்கொண்டபின் வாழைப்பழமொன்று சாப்பிடுவதை வழக்கப்படுத்திக் கொள்ளுங்கள். இது உங்கள் ஆரோக்கியமான வாழ்க்கைக்கு வழிவகுக்கும்.

உடற்பருமன்

உயர்ந்த மனஅழுத்த வேலைகளில் உள்ளவர்கள் இரத்தத்தில் உள்ள குளுகோஸ் அளவு சீராக இல்லாத காரணத்தால் உடற்பருமன் ஏற்படுகிறது. வாழைப்பழத்தை தினமும் உணவில் சேர்த்து வந்தால் இரத்தத்தில் உள்ள குளுகோஸ் அளவை ஒரு ஸ்திரத்தன்மைக்கு கொண்டு வந்து உடற்பருமன் குறைய பெரிதும் உதவுகிறது.

DEEPAM .news
தீபம்
கனடாப் பதிப்பு
19.10.2016

மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினை: 'இறுதித்தீர்வு' எட்டப்படவில்லை!



கடந்த வெள்ளிக்கிழமை(14) தோட்டத் தொழிலார்களின் சம்பளப் பிரச்சினை குறித்து இறுதித்தீர்வை எடுக்கும் வகையில் தொழில் அமைச்சில் இடம் பெற்ற பேச்சு வார்த்தையிலும் 'இறுதித்தீர்வு' எட்டப்பட வில்லை, எதிர்பார்த்தபடி கூட்டுஒப்பந்தம் கைச்சாதிடப்படவுமில்லை.

இப்பேச்சுவார்த்தையின் போதும், "730 ரூபா நாட்சம்பளத்திற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது. ஆனால் வேலைநாட்கள் தொடர்பில் இணக்கம் காணப்படவில்லை." எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பேச்சு வார்த்தையில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கலந்து கொண்ட போதிலும்,தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் கலந்து கொள்ளவில்லை. எனவே கூட்டுஒப்பந்தந்தில்கைச்சாத்திட முடியாது போனதாகவும், எதிர்வரும் 18 ஆம்; திகதி கூட்டுஒப்பந்தகைச்சாத்திடப்படலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேச்சு வார்த்தையில் இ.தொ.காங்கிரஸ் உறுப்பினர்கள், வருடத்தில் 300 நாட்கள் வேலைவழங்கப்பட வேண்டும் என வலியுறத்திய போதிலும் முதலாளிமார் சம்மேளனம் வருடத்தில் 250 நாட்கள் மாத்திரமே வேலை வழங்கும் முடிவில்



உறுதியாக இருந்ததாகவே தெரிகிறது.

பேச்சு வார்த்தையின் முடிவில் கருத்து வெளியட்டுள்ள தொழில் அமைச்சர் ஜோன் செவிரெட்ன,'பேச்சுவார்த்தைகள் சுமூகமான நிலையில் நடைபெற்றன. தேசிய தோட்டத் தொழிலாளர்சங்கத்தின் செயலாளர் சுரேஷ் வடிவேல் கலந்து கொள்ளவில்லை. அடுத்தவாரம் சகலதரப்புக்களையும் ஒன்றிணைத்து கூட்டுஒப்பந்தத்தில் கைச்சாத்திடவுள்ளோம்.'எனத்தெரிவித்திருக்கிறார்.

அதேசமயம் தொழிலாளர் கோரிக்கையான 18 மாத நிலுவைப்பணம் வழங்கப் படுவது குறித்துதீர்மானங்கள் எதுவும் மேற் கொள்ளப்படவில்லை என்றே தெரிய வருகிறது. இ.தொ.காங்கிரஸ், தமிழ் முற்போக்கு கூட்டணியின் இடைக்காலக் கொடுப்பனவு தொடர்பான உடன்பாடுகளால் சம்பள நிலுவையை பெறமுடியாது போயுள்ளது எனக் குற்றம் சாட்டியிருக்கிறது.

தோட்டத் தொழிலாளர்களின் போராட்டங்கள் தற்போதும் ஒரு சில இடங்களில் நடைபெற்றுவருகின்றன. எனினும் பல தோட்டங்களில் தொழிலாளர் தொழிலுக்கு திரும்பியுள்ளார்கள்.தொழில் அமைச்சர்

ஜோன் செவிரெட்ன,'பெருமளவானோர் 730 ரூபா சம்பளத்தை ஏற்றுக் கொண்டு வேலைக்குத் திரும்பியுள்ளனர்.' எனத் தெரிவித்திருக்கிறார். இதேவேளை, மாத்தளையிலுள்ள எல்கடுவ பிளான்டேஷன், அரச பெருந்தோட்ட தோட்டத்தலைவர்களுக்கான ஒன்று கூடலை சமூக நீதிக்கான மலையக வெகுஜன அமைப்பு கடந்தவாரம் 15ம் திகதியன்று ஏற்பாடு செய்திருந்தது. இங்கு சகல தொழிற்சங்க தலைவர்களும்,இடது சாரிய அமைப்புகளை சேர்ந்தவர்களும் கலந்து கொண்டனர். தொடர்ந்து 1000 ரூபா சம்பளத்திற்காக போராடவும்,

1000- ம் ரூபா சம்பளம் கிடைக்க வில்லையாயின் தொழிற்சங்கங்களுக்கான தமது சந்தாவை நிறுத்துவதாகவும், இனிமேல் நடைபெறும் தேர்தல்களை புறக்கணிப்பதாகவும் அந்த ஒன்றுகூடலில் முடிவெடுக்கப் பட்டதாகதெரியவருகிறது. இந்த அமைப்பின் தலைமையில், யாழ் நகரில் கடந்தவாரம் மலையக தொழிலாளர் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து,கவன ஈர்ப்புப் போராட்டம் ஒன்றும் நடைபெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.